# உதயன்

சுடர் : 36 கதிர் : 183 | வெள்ளிக்கிழமை | வைகாசி 13 ஆம் நாள் 28 மே 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 14 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


## வடக்கில் 77 தொற்று!

யாழ்ப்பாணம், மே 28

யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் நேற்றுமுன்தினம் இரவு 178 பேருக்கு மேற்கொள் ளப்பட்ட சோதனையில் 13 02

## பி.சி.ஆர். சோதனை தடைப்பட்டமைக்கு சுகாதாரத் திணைக்கம் காரணம் அல்ல!

*குறிப்பிட்ட வகை அழிபொருள்கள் இன்மையே காரணம்; சுகாதார திணைக்கள பணிப்பாளர் கேதீஸ்வரன் விளக்கம்*

யாழ்ப்பாணம், மே 28

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தில் மேற்கொள்ளப் பட்டுவந்த பி.சி.ஆர். சோதனைகள் தடைப்பட்டமைக்கு சுகாதாரத்திணைக் களம் காரணமல்ல. குறிப்பிட்ட வகை அழிபொருள்கள் இல்லாமல் போன மையே காரணம் என்று தெரிவித் தார் வடமாகாண சுகாதார திணைக்க ளத்தின் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன்.

இது தொடர்பில் அவரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கை யில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது: 02



## சட்டவிரோத மது விற்பனை: மதுக்கடைகளுக்கு 'சீல்'

யாழ்ப்பாணம், மே 28

நாடெங்கிலும் சட்டவிரோத மது விற்ப னையைக் கட்டுப்படுத்தும் நோக்கில், மதுக்கடைக 02

## வடக்கு வரவிருந்த தடுப்பூசி மாத்தறைக்கு மாற்றப்பட்டது!

யாழ்ப்பாணம், மே 28

சீன அரசால் இரண்டாம் கட்ட நன்கொடையாக வழங்கப்பட்ட தடுப்பூசிகள் குருநாகல், காலி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கே ஆரம்பத் தில் பகிர்ந்தளிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது எனவும், இறுதி நேரத்தில் அது மாத்தறை மாவட்டத்துக்கு வழங்கப் பட்டுள்ளது எனவும் அறியமுடிகின்றது. 02

## கொழும்பு துறைமுக நகர சட்டம் அமுலுக்கு வந்தது

கொழும்பு, மே 28

நாடாளுமன்றத்தில் கடந்த 20ஆம் திகதி நிறைவேற்றப் பட்ட கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக் குழு சட்டவரைபில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தனது கையொப்பத்தை 02

## பருத்தித்துறையில் சமூகத் தொற்று?

- 37 பேருக்கு அன்டிஜென்
- 15 பேருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், மே 28

பருத்தித்துறை ஓடக்கரை பகுதியில் 37 பேரிடம் முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்டிஜென் 02



## மூழ்கும் நிலையில் எக்ஸ்பிரஸ் பேர்ள்

*தீ கட்டுப்பாட்டுக்குள்*

கொழும்பு, மே 28

கொழும்புத் துறைமுகத்துக்கு அரு கில் 'எக்ஸ் - பிரஸ் பேர்ள்' கப்பலில் ஏற்பட்டிருந்த தீ நேற்று மாலை முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. எனி னும் கப்பல் மூழ்கும் அபாயத்தில் உள்ளது 02

## பிறந்து 24 நாள்களேயான குழந்தைக்கு கொரோனா

*தாய்க்கும் தொற்று*

யாழ்ப்பாணம், மே 28

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனை யில் பிறந்து 24 நாள் களேயான குழந்தைக் 02

## கிராம அலுவலரின் பணி அத்தியாவசியத் தேவை

*பணிப் புறக்கணிப்பு பின்னணியில் வெளியானது விசேட வர்த்தமானி*

கொழும்பு, மே 28

கொரோனாத் தடுப்பூசி ஏற்றலில் முறைகேடு இடம்பெற்றது என்று தெரிவித்து கிராம அலுவலர்கள் கடந்த 25 ஆம் 02

## தனிநபரின் அந்தரங்கங்களை கண்காணிப்பது நோக்கமல்ல

*பொலிஸ் பேச்சாளர் விளக்கம்*

யாழ்ப்பாணம், மே 28

ட்ரோன் கமரா ஊடாக பெரு வீதிகள், சிறு வீதிகள் மற்றும் விளையாட்டு மைதா னங்கள் போன்ற இடங் களே கண்காணிக்கப்படும். 03

## முடக்கப்பட்ட பகுதிகளின் பி.சி.ஆர். முடிவுகள் தாமதம்

*காரைநகரில் அறிகுறிகளுடன் பலர் வீடுகளுக்குள்*

யாழ்ப்பாணம், மே 28

காரைநகரில் ஜே/47 கிராம அலுவலர் பிரிவின் ஒரு பகுதி முடக்கப்பட்டுள்ள 03


உதயன் நாளிதழில் உங்கள் செய்திகளும் விளம்பரங்களும் வெளியாக வேண்டுமா?

விளம்பரம் 021 493 1111 071 6182182

செய்திகள் 021 493 0000 077 1209994

வாசகர்களே! உதயன் + சஞ்சீவி

ஞாயிறு உதயன் + சஞ்சீவி 40/=

திங்கள் உதயன்- ரூபா 30/=

ஞாயிறு உதயன் நாளிதழ், சஞ்சீவி வார இதழ் என்பன எதிர்வரும் (31.05.2021) திங்கட்கிழமை நாளிதழோடு மேலதிகமாக வெளிவரும்

முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு வரவிருந்த...

சீன அரசு இரண்டாம் கட்டமாக வழங்கிய 5 லட்சம் தடுப்பூசிகளில் 3 லட்சத்து 75 ஆயிரம் தடுப்பூசிகள் இரண்டாவது டோஸுக்கு உரியவை. எஞ்சிய ஒரு லட்சத்து 25 ஆயிரம் தடுப்பூசிகளே முதலாவது டோஸுக்கு உரியவை.

முதலாவது டோஸுக்கு உரிய தடுப்பூசிகள் குருநாகல், காலி மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவிருந்தன. இது தொடர்பான தகவல்கள் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டிருந்தன. கடந்த 24ஆம் திகதி வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில், தடுப்பூசி விரைவில் கிடைக்கப்பெறும் என்றும் அதனை எவ்வாறு வழங்கி முடிப்பது, எவ்வாறு செயற்படுத்துவது என்பது தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது.

ஆனால் இறுதி நேரத்தில் ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைவாக யாழ்ப்பாண மாவட்டத்தை விட மாத்தறை மாவட்டம் அதிக அபாயமுள்ள பிரதேசம் என்று அடையாளப்படுத்தப்பட்டு அங்கு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடமாகாண சுகாதாரத் திணைக்களத்தினரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, சீனாவில் இருந்து கிடைத்துள்ள தடுப்பூசிகளில் ஒரு தொகுதி வடக்கு மாகாணத்துக்கு அனுப்பப்படும். அவசர தேவை கருதியவர்களை தடுப்பூசி ஏற்ற தயார் நிலையில் வைக்குமாறு தெரிவிக்கப்பட்டது. எனினும் தடுப்பூசி மாற்றப்பட்டது தொடர்பில் எந்தத் தகவலும் தரப்படவில்லை - என்று தெரிவிக்கப்பட்டது. (ம-ஒ.5,26)

## பி.சி.ஆர்....

கொவிட் பெருந் தொற்று இலங்கையில் ஆரம்பித்த காலத்தில் வடமாகாணத்தில் கொவிட் தொற்றுக்குரிய பி.சி.ஆர். பரிசோதனை வசதிகள் ஏதும் இருக்கவில்லை. மாகாண சுகாதாரத் திணைக்களம் கேட்டுக்கொண்டதன் பேரில் யாழ். மருத்துவபீட ஓர் ஒட்டுண்ணியியல் துறையின் ஆய்வு கூடத்தில் பரிசோதனைகளைச் செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு பரிசோதனைகள் செய்யப்பட்டு வருகின்றன. இவ் ஆய்வுகூடத்தில் பி.சி.ஆர். பரிசோதனைகளைச் செய்வதற்கு பல்வேறு அழிபொருள்கள் தேவை. இவை இரண்டு வகைப்படும்.

1. பி.சி.ஆர். பரிசோதனை இயந்திரத்துக்கான அழிபொருள்கள் இவை இயந்திரத்தின் வகைக்கு பொருத்தமானவையாக இருக்க வேண்டும்.
2. ஆய்வுகூடத்தின் ஏனைய அழிபொருள்கள் தொற்றுநீக்கிகள், முகக்கவ சங்கள் மற்றும் அங்கிகள் எனப் பல.

இந்த அழிபொருள்களில் ஆய்வுகூட இயந்திரத்துக்கான அழிபொருள்கள் ஒவ்வொரு முறையும் நேரடியாக சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியுடன் கொழும்பில் அமைந்துள்ள மருந்து வழங்கல் பிரிவிலிருந்து வழங்கப்படும் எனவும், அதற்கான கோரிக்கைக் கடிதம் மருத்துவபீடத்தின் பீடாதிபதியால் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும் எனவும், அப்பொருள்களை பீடாதிபதியின் பெயர் குறிப்பிடப்பட்டு வழங்கப்படும் அனுமதிக்கடிதத்துடன் செல்லும் யாழ். [illegible]

துக் களஞ்சியத்தின் மருந்தாளர் எடுத்துவந்து மருத்துவபீடத்துக்கு வழங்குவார் எனவும், மருத்துவபீடத்துக்கும் யாழ். போதனா மருத்துவமனைக்கும் இடையிலான கடிதப் போக்குவரத்தை மாகாண சுகாதாரத் திணைக்களம் ஒருங்கிணைக்கும் எனவும் சுகாதார அமைச்சின் பணிப்புக்கு அமைய எம்மாலும் மருத்துவ பீடத்தினராலும் யாழ் போதனா மருத்துவமனை நிர்வாகத்தினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதேவேளை ஏனைய அழிபொருள்களும் ஆரம்பத்தில் நேரடியாக சுகாதார அமைச்சின் மருந்து வழங்கல் பிரிவினரால் வழங்கப்பட்டிருந்தாலும், அவற்றின் விநியோகம் சீரற்றும் முழுமையற்றும் காணப்பட்டதால் அதற்கான பொறுப்பை மாகாண சுகாதாரத் திணைக்களம் பொறுப்பேற்றுக் கொண்டது. அதன்படி இவ் அழிபொருள்கள் தொடர்ச்சியாக எம்மால் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

காலக்கிரமத்தில் யாழ். போதனா மருத்துவமனையிலும் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இலங்கையில் உள்ள பி.சி.ஆர். இயந்திரங்கள் பல்வேறு உற்பத்தி நிறுவனங்களின் பல்வேறு வகை மாதிரிகள் ஆகும். அவ்வகையில் யாழ். மருத்துவபீடத்தில் உள்ள பி.சி.ஆர். இயந்திரத்திலிருந்து யாழ். போதனா மருத்துவமனையில் உள்ள இயந்திரம் வேறுபட்டது. இவற்றுக்கு வகைப்பொருத்தமான அழிபொருள்கள் மட்டுமே பாவிக்க முடியும்.

கடந்த சில வாரங்களாக மருத்துவபீடத்தின் பி.சி.ஆர். இயந்திரத்துக்குரிய குறிப்பிட்ட ஒரு அழிபொருள் சுகாதார அமைச்சின் கையிருப்பில் இல்லாமல் போய் உள்ளது. இதனால் சுகாதார அமைச்சு உள்ளூர் கொள்வனவு முறையில் குறிப்பிட்ட பொருளைக் கொள்வனவுசெய்ய முடிவுசெய்து வழங்குநருக்கு கொள்வனவுக் கட்டளையும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் வழங்குநரால் குறிப்பிட்ட அழிபொருளை இன்றுவரை வழங்க முடியாமல் உள்ளது.

மருத்துவ உபகரணங்கள் குறிப்பாக ஆய்வுகூட உபகரணங்கள் பல கோடி ரூபா பெறுமதியானவை. இவற்றுக்குரிய அழிபொருள்கள் வகைபொருத்தமானவையாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அந்த உபகரணங்களில் பழுது ஏற்படலாம் என்பதுடன், வழங்குநர் வழங்கியுள்ள உத்தரவாதங்களும் செயலிழந்துவிடும். தற்போது வழங்குநர் மருத்துவபீடத்தின் இயந்திரத்துக்குப் பொருத்தமற்ற வேறு வகை அழிபொருளை மட்டுமே கையிருப்பில் வைத்துள்ளார்.

குறிப்பிட்ட அழிபொருளை பெறுவதற்கு வடமாகாண சுகாதாரத் திணைக்களமும் இலங்கை சுகாதார அமைச்சும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. அழிபொருள்கள் உரிய வழங்குநரிடம் இருந்து கிடைத்ததும் மருத்துவபீடத்தின் பி.சி.ஆர். பரிசோதனைகளை மீள ஆரம்பிக்க முடியும் - என்றுள்ளது. (ம)

## கொழும்பு...

யிட்டு சான்றுரைப்படுத்தினார்.

நேற்று முற்பகல் 11.20 மணிக்கு சபாநாயகர் தனது சான்றுரைப்படுத்தலை வழங்கினார் என்று சபாநாயகர் அலுவலகம் தெரிவித்தது. இதற்கமைய கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டம் நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது. (ம-44)

## மூழ்கும்...

என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை - இந்தியக் கடற்படையினரின் கூட்டு நடவடிக்கை மூலம் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என இலங்கைக்கான இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது. ஆனபோதும் கப்பலின் பெரும்பாலான பகுதி தீயில் எரிந்துள்ளதுடன், அதில் இருந்த கொள்கலன்கள் பலவும் எரிந்து கடலுக்குள் விழுந்துள்ளன.

கொழும்புத் துறைமுகத்தில் இருந்து 10 கிலோ மீற்றர் தூரத்தில் கடந்த 19ஆம் திகதி இரவு கப்பலில் தீ பரவியிருந்தது. ஆரம்பத்தில் இலங்கை கடற்படையினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருந்தபோதும், கடந்த 25ஆம் திகதி காலை கப்பலில் ஏற்பட்ட வெடிப்பைத் தொடர்ந்து கப்பல் முழுவதும் தீ பரவியிருந்தது.

இந்நிலையில் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இந்தியக் கடற்படையினரும் இலங்கைக் கடற்படையினரின் உதவிக்கு வந்திருந்தனர். இதன்படி நேற்று மாலை தீ முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. கப்பலில் இருந்து தொடர்ந்தும் புகை வெளிவருவதால் மீண்டும் தீ ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதனால் மீண்டும் தீ ஏற்படாத வகையில் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று இலங்கைக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். இதேவேளை, கப்பலின் ஒரு பகுதி சாய்ந்தவாறு இருப்பதால் அது கடலுக்குள் மூழ்க வாய்ப்புள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-22)

## வடக்கில்...

பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. நேற்று பகல் 659 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 64 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அதேவேளை, 190 பேரின் மாதிரிகள் மீளவும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### யாழ்ப்பாண மாவட்டம்

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் ஒருவருக்கும், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 2 பேருக்கும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 3 பேருக்கும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 6 பேருக்கும், வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்கும், பருத்தித்துறை சுகாதார அதிகாரி பிரிவில் 7 பேருக்கும், யாழ் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 11 பேருக்கும் என 33 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

### கிளிநொச்சி மாவட்டம்

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் 3 பேருக்கும், கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேருக்கும், கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 10 பேருக்கும், தருமபுரம் மற்றும் அக்கராயன்குளம் பிரதேச மருத்துவமனைகளில் தலா 2 பேருக்கும் என 21 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

### முல்லைத்தீவு மாவட்டம்

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் 3 பேருக்கும், சிலாவத்துறை பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும், முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் மையத்தில் ஒருவருக்கும் என்று 5 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

### வவுனியா மாவட்டம்

வவுனியா மாவட்ட மருத்துவமனையில் 3 பேருக்கும், பம்பைமடு தனிமைப்படுத்தல் நிலையத்தில் 14 பேருக்கும், செட்டிக்குளம் ஆதார மருத்துவமனையில் ஒருவருக்கும் என்று 18 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ.5)

## சட்டவிரோத...

ளுக்கு 'சீல்' வைக்கப்பட்டு வருகின்றது.

கொரோனா காரணமாக நாட்டில் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது. பயணத் தடை அவ்வப்போது விலக்கப்பட்டாலும் மது விற்பனை நிலையங்கள் திறக்கப்படுவதற்குத் தொடர்ந்தும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் சட்டவிரோதமாக மது விற்பனை இடம்பெறும் சம்பவங்கள் அண்மைக்காலமாக பதிவாகியுள்ள நிலையில், அத்தகைய விற்பனைகளைக் கட்டுப்படுத்தும் வகையில் அனைத்து மதுக்கடைகளுக்கும் 'சீல்' வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-26)

## கிராம அலுவலரின்...

திகதி நள்ளிரவு முதல் பணிப் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுவரும் நிலையில், கிராம அலுவலர்களின் பணியை அத்தியாவசியத் தேவையாக உள்ளீர்த்து விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த அதிவிசேட வர்த்தமானியில், கிராம அலுவலர்களின் பணிக்கு மேலதிகமாக துறைமுகம், பெற்றோலியம், பொதுப்போக்குவரத்து, அரச வங்கிகள் மற்றும் கள உத்தியோகத்தர்களின் சேவை ஆகியவையும் இடம்பெற்றுள்ளன. (ம)

## பிறந்து....

குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மூன்று நாள்கள் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட அந்தக் குழந்தை, தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் அங்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் சோதனையிலேயே தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. குழந்தை மருத்துவ நிபுணர்களின் கண்காணிப்பின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இதேவேளை குழந்தையின் தாய்க்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-25)

## பருத்தித்துறையில்...

பரிசோதனையில் 15 பேருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலில் நேற்று வியாழக்கிழமை ஓடக்கரைக் கிராமத்தில் 37 பேரிடம் அதிவிரைவு அன்டிஜென் சோதனை முன்னெடுக்கப்பட்டது.

அவர்களில் 15 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஓடக்கரைக் கிராமத்தில் அண்மைய நாள்களில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வரும் நிலையில், இந்த சிறப்பு பரிசோதனை அங்கு நேற்று முன்னெடுக்கப்பட்டமை [illegible] (ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடக்கப்பட்ட....

நிலையில் காரைநகர் பிரதேச மருத்துவமனைக்கு அறிகுறிகளுடன் சென்ற பலருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் இன்னமும் வெளியாகவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

காரைநகரில் தொற்றாளர்கள் சிலர் அறிகுறிகளுடன் கண்டறியப்பட்டனர். அவர்களின் பி.சி.ஆர். மாதிரிகள் காரைநகர் பிரதேச மருத்துவமனை ஊடாகப் பெற்றுக்கொள்ளப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டன. அதில் 17 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். இதனையடுத்து அந்தப் பகுதி கொரோனாத் தடுப்புச் செயலணியால் முடக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் உள்ள பலர் தொற்றுக்குரிய அறிகுறிகளுடன் காரைநகர் மருத்துவமனைக்கு சென்றனர். அவர்களின் பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்பட்டன. கடந்த 25ஆம் திகதி பெறப்பட்ட மாதிரிகளின் முடிவுகள் கூட இதுவரை வெளியாகவில்லை.

தொற்றுக்குரிய அறிகுறிகளுடன் அவர்கள் வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தற்போது பனடோல் மாத்திரமே வழங்கப்படுகின்றது. கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்படாமையால் அவர்கள் இடைநிலை சிகிச்சை நிலையங்களுக்கோ மருத்துவமனைகளுக்கோ அழைத்துச் செல்லப்படவில்லை. பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் தாமதமாவது பேராபத்தான நிலை என்று சுட்டிக் காட்டப்படுகின்றது. (ம-ஒ.5)

## தனிநபரின்...

தனி நபர்களின் வீடுகள், அவர்களின் அந்தரங்கங்களை கண்காணிப்பது இதன் நோக்கமல்ல என்பதுடன் அவ்வாறு முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் சிறுபிள்ளைத் தனமானவை இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.


பயணத் தடை காலங்களில் ட்ரோன் கமரா ஊடான கண்காணிப்பு நடவடிக்கை மேல் மாகாணத்தையடுத்து வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் ஆரம்பிக்கப்பட்டது. ட்ரோன் கமரா ஊடான கண்காணிப்பு தனிநபர் அந்தரங்கத்தை, தனிநபர் உரிமையை மீறுவதாக மனித உரிமை ஆர்வலர்களால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அதிலும் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா போன்ற மாவட்டங்களில் கொழும்பைப் போல் அல்லாது மக்கள் தங்கள் கிணறுகளிலேயே குளிக்கின்றனர். இவ்வாறான ட்ரோன் கமராக்கள் மூலமான கண்காணிப்பின் ஊடாக தனிநபர் சுதந்திரம் பாதிக்கப்படுகின்றது என்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தனர்.

இது தொடர்பில் பொலிஸ் பேச்சாளரிடம் கேட்டபோது, மேல் மாகாணத்தில் இந்தத் திட்டம் முதலில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அங்கு மக்கள் நெருக்கமாக வாழ்கின்றனர். பயணத் தடைக் காலங்களில் சிறுவர்கள், இளைஞர்கள் மைதானங்களில் விளையாடுகின்றனர். வீதிகளில் தேவையற்று நடமாடுகின்றனர். இதனைக் கண்காணிக்கவே ட்ரோன் கமராவைக் களமிறக்கினோம்.

மேல் மாகாணத்தைப் போலவே யாழ்ப்பாண மாவட்டத்திலும் சன நெருக்கம் அதிகம். இங்கும் பயணத் தடைக் காலங்களில் அத்துமீறுகின்றனர் என்பதாலேயே ட்ரோன் கமரா கண்காணிப்பு ஆரம்பிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் ட்ரோன் கமராவால் கண்காணிக்கப்பட்டு 10 பேர் யாழ்ப்பாணத்தில் கைதாகினர். அவர்கள் வீதிகளில் தேவையற்று நடமாடியவர்கள். இவர்கள் எச்சரிக்கையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர். தனிநபரையோ, வீடுகளையோ ட்ரோன் கமரா ஊடாகக் கண்காணிக்கவில்லை. பிரதான வீதிகள், சிறு வீதிகள், சந்திகள் மற்றும் விளையாட்டு மைதானங்களையே கண்காணிக்கின்றோம்- என்றார். (ம-ஒ.5,22)

## மரண அறிவித்தல்



### கந்தையா இராசரத்தினம்

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசரத்தினம் நேற்று (27.05.2021) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா பாக்கியம் ஆகியோரின் அன்பு மகனும், சுப்பிரமணியம் இரத்தினம் ஆகியோரின் அன்பு மருமகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சண்முகராசா, கனகரத்தினம், மருதவாணர், பேரம்பலம் மற்றும் சிவயோகம் (வட்டுக்கோட்டை) கமலாதேவி (உருத்திரபுரம்), திருச்செல்வம் (வன்னேரிகுளம்) ஆகி யோரின் பாசமிகு சகோதரரும், திவ்வியகுமார் (தபால் உத்தியோகத்தர்-பரந்தன்), சிவகுமார் (பிரான்ஸ்), குககுமார் (அமரர்), தவக்குமார் (பிரான்ஸ்), ராஜ்குமார் (பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை-கிளிநொச்சி), சந்திரகுமார் (ஸ்கந்தபுரம்), அருட்குமார் (அவுஸ்ரேலியா), பத்மகுமார் (மாவட்ட பொது வைத்தியசாலை கிளிநொச்சி), இந்திரகுமார் (மக்கள் வங்கி முல்லைத்தீவு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிரகபதி, புஸ்பமாலா, சுலோசனா, ராஜமலர், நந்தினி, கார்த்திகா, கோகிலா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கௌசிகன், யோகிசன், கௌசிகா, டிலக்சன், மேதினி தமிழினி, யதுர்சிகா, அபிசன், அருவிந், கனுபவன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.05.2021) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக உருத்திரபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்பு:**
**0777373094, 0772090636**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## வாள்வெட்டில் இளைஞன் காயம்

யாழ்ப்பாணம், மே 28

யாழ்ப்பாணம் தென்மராட்சி கரம்பகம் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாள்வெட்டில் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த குழுவினர், குறித்த இளைஞனைத் தாக்கிவிட்டு தப்பியோடியுள்ளனர்.

கையில் காயம் அடைந்த அவர் தற்போது சாவச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ம-26)

## நேற்று தொற்று! 2,584

கொழும்பு, மே 28

நாட்டில் நேற்று 2 ஆயிரத்து 584 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 74 ஆயிரத்து 861ஆக உயர்வடைந்துள்ளது. கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 43 ஆயிரத்து 789ஆக அதிகரித்துள்ளது. (ம-22)




## வழித்துத்துடைக்கப்படுமா இலங்கை அணி?

டாக்கா, மே 28

பங்களாதேஷ் - இலங்கை அணிகளுக்கு இடையிலான ஒரு நாள் தொடரில் இலங்கை அணி வழித்துத் துடைக்கப்படுமா? அல்லது வழித்துத் துடைக்கப்படுவதை இலங்கை அணி தவிர்க்குமா? என்ற எதிர்பார்ப்பு பெரியளவில் எழுந்துள்ளது.

இலங்கை அணி பங்களாதேஷுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு மூன்று ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகின்றது.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலிரு ஆட்டங்களிலும் பங்களாதேஷ் அணி வெற்றிபெற்றுள்ளது. ஆதலால் கிண்ணம் பங்களாதேஷிடம் செல்வது உறுதியாகியுள்ளது.

இந்த நிலையில் தொடரின் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் இன்று நடை பெறுகின்றது. இன்றும் பங்களாதேஷ் வெற்றிபெற்றால் தொடரை 3:0 என்ற அடிப்படையில் வழித்துத் துடைக்கும். எனவே தொடரை இழந்தாலும் கௌரவத் தோல்வி என்ற அடிப்படையில் தொடரை இழக்க இலங்கை இன்று கடும் போராட்டத்தை வெளிப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தகையதொரு பின்னணியில் இலங்கை அணி வழித்துத் துடைக்கப்படுமா? அல்லது வழித்துத் துடைக்கப்படுவதை இலங்கை அணி தவிர்க்குமா? என்ற எதிர்பார்ப்பு பெரியளவில் எழுந்துள்ளது.

பங்களாதேஷ் அணி இதுவரை இலங்கைக்கு எதிராக ஒரு நாள் தொடரைக் கைப்பற்றியதில்லை. இந்தத் தொடரிலேயே இலங்கை அணியின் இந்த நீண்ட சாதனைக்கு பங்களாதேஷ் முற்றுப்புள்ளி வைக்குமா குறிப்பிடத்தக்கது. (ம)

## கொரோனா தொற்றால் மேலும் 27 பேர் சாவு


கொழும்பு, மே 28

நாட்டில் மேலும் 27 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்துள்ளது. இதன்படி நாட்டில் பதிவான மொத்த கொரோனா சாவுகளின் எண்ணிக்கை ஆயிரத்து 325ஆக உயர்வடைந்துள்ளது. (ம-22)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அந்நியச் செலாவணியைக் கட்டுப்படுத்த எரிபொருள் விலை அதிகரிப்பே தீர்வு!!!

## எரிசக்தி அமைச்சின் செயலர் கணிப்பு



**கொழும்பு, மே 28**

**உள்நாட்டில் எரிபொருள் பாவனையைக் கட்டுப்படுத்தவும், அதிகரித்துச் செல்லும் அந்நியச் செலாவணியைக் கட்டுப்படுத்தவும் எரிபொருள் விலை அதிகரிப்பே ஒரே தீர்வு என்று எரிசக்தி அமைச்சின் செயலர் கே.டி.ஆர்.ஒல்கா தெரிவித்துள்ளார்.**

எரிபொருள் விலை உயர்த்தப்படுவதாக இருந்தால், பெற்றோல் மற்றும் பிற பெற்றோலியப் பொருள்களின் விலைகள் மட்டுமே அதிகரிக்கப்படும். மக்களின் அன்றாடத் தேவைகளுடன் தொடர்புடைய டீசலின் விலை அதிகரிக்கப்படமாட்டாது என்று அவர் மேலும் கூறினார்.

'பெற்றோலியப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு ஆண்டொன்றுக்கு 3 பில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்படுகின்றது. தற்போதைய நிலையில் இது பெரும் செலவு' என்று ஒல்கா குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில், நல்லாட்சி அரசின் காலத்தில் எரிபொருள் விலைச் சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. 2019ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வரையில் நடைமுறையில் இருந்தது. புதிய அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் கொரோனாச் சூழலால் உலக சந்தையில் எரிபொருள் விலை குறைவாகவே இருந்தது. ஆனால் உலக சந்தையில் எரிபொருள் விலை கணிசமான அளவு அதிகரித்துள்ளது. அரசு வரி விலக்கு வழங்கினாலும், மானியம் வழங்கினாலும் பெரும் இழப்புக்கு மத்தியிலேயே பெற்றோலியப் பொருள்கள் நாட்டுக்கு கொண்டுவரப்படுகின்றன. எரிபொருள் விலையை அதிகரிப்பதே இதற்குத் தீர்வாகும் -என்றார். இதே வேளை எரிபொருள் விலை அதிகரிப்புத் தொடர்பில் ஆராய அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டுள்ளது. இதுவரையில் எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பில் இறுதித் தீர்மானம் எதுவும் எட்டப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ,5,இ)

# தீப்பற்றும் கப்பல்களால் இலங்கைக்கே ஆபத்து

## சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் சுட்டிக்காட்டு

கொழும்பு, 28

இலங்கையை அண்மித்த கடற்பரப்புகளில், தொடர்ச்சியாக கப்பல்கள் தீப்பிடித்து வருவதால், இலங்கைக்கே ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் எம்.டி நியூ டயமண்ட் எண்ணெய் தாங்கிக் கப்பலொன்று தீப்பிடித்தது. நீண்ட போராட்டத்தின் பின்னர் தீ கட்டுப்படுத்தப்பட்டதும், கடலில் ஆய்வுகளும் நடத்தப்பட்டன. இதனால் பெரும் அபாயம் தவிர்க்கப்பட்டிருந்தது. இருப்பினும் 7 மாதங்களுக்குப் பின்னர் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றியுள்ளது. இந்தக் கப்பலில் ஏற்பட்ட தீயை அணைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதனால் இலங்கைக் கடல் சூழலுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படலாம் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ-4)



# பேர்ள் கப்பல் நங்கூரமிட அனுமதிக்காத நாடுகள்

## வெளியானது மற்றொரு தகவல்

கொழும்பு,மே 28

கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் தீப்பற்றியுள்ள எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் நங்கூரமிடுவதற்கு, கட்டாரும், இந்தியாவும் அனுமதி வழங்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் கப்பலில் ஆயிரத்து 486 கொள்கலன்கள் உள்ளன. அவற்றில் 25 கொள்கலன்களில் அமிலங்கள் உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அமிலங்கள் சரியான முறையில் கொள்கலன்களில் அடைக்கப்படாமையால், கசிவு ஏற்பட்டுள்ளது என்று கப்பல் நிறுவனத்தின் நிறைவேற்றுத் தவிசாளர் ரிம் ஹார்ட்னோல் ஆங்கில ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். இலங்கைக்கு பல்லாயிரம் கிலோ மீற்றர் தொலைவிலேயே இந்த அமிலக் கசிவு கண்டறியப்பட்டுள்ளது. அதனால் கொள்கலன்களைத் தரையிறக்கிக்கொள்வதற்கு இரண்டு நாடுகளின் துறைமுகங்களிடம் அனுமதி கோரப்பட்ட போதிலும், அனுமதி கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தியாவின் மேற்கு கரை துறைமுகத்திலும், கட்டாரின் ஹமாட் துறைமுகத்திலும் இந்த அனுமதி கோரப்பட்டுள்ளது. எனினும் இரு நாடுகளும் கப்பல் நங்கூரமிடுவதற்கு அனுமதி வழங்கவில்லை.

குறித்த இரண்டு துறைமுகங்களில் ஏதேனும் ஒன்றில் கொள்கலன்கள் இறக்கப்பட்டிருந்தால், இந்த விபத்தைத் தவிர்த்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-4)

# சேதனப்பசளை உற்பத்திக்கு குறைத்த வட்டியில் கடன்கள்

கொழும்பு,மே 28

நாட்டில் இரசாயன உரத்தை இறக்குமதி செய்வதற்காக வருடாந்தம் அதிகளவு நிதி செலவிடப்படுகின்றது. அதனை சேதனப் பசளை உற்பத்திக்குப் பயன்படுத்த முடியும். இந்தத் திட்டத்தை வெற்றிபெறச் செய்வதற்கு அரச வங்கிகள் குறைந்த வட்டியுடன் கடன் வசதிகளை வழங்க முன்வந்துள்ளன என்று அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

விவசாயத்துறை அமைச்சின் அதிகாரிகள் மற்றும் சேதனப் பசளை உற்பத்தியாளர்களுடன், ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் அதிகாரிகள் இதனைத் தெரிவித்தனர்.

இது தொடர்பான ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டின் விவசாயத் துறையை முழுமையாக சேதனப் பசளை பயன்பாட்டுக்கு மாற்றுவது ஜனாதிபதியின் நோக்கமாகும். எதிர்கால தலைமுறையின் நலனுக்காக மேற்கொள்ளப்படும் இந்த முயற்சியில் விவசாயிகளுக்கு அசௌகரியங்கள் ஏற்படாத வகையில் இலக்குகளை அடைந்துகொள்ள வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இதற்காக சேதனப் பசளை உற்பத்தியின் அளவை அதிகரிக்க வேண்டும். உற்பத்தி செய்யப்படும் பசளைகளின் அளவு குறித்து திருப்தியடையாத பட்சத்தில் உயர்தரம் வாய்ந்த சேதனப் பசளையை தேவையானளவு இறக்குமதி செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். சில போகங்களுக்குள் விவசாயத்துறைக்குத் தேவையான சேதனப் பசளையின் அளவை நாட்டில் உற்பத்தி செய்ய முடியும் என்று உர உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

சேதனப் பசளையை பயன்படுத்துவதற்கு மாவட்ட மட்டத்தில் விவசாய ஆலோசகர்கள் மற்றும் விவசாய ஆராய்ச்சி அதிகாரிகளைத் தெளிவூட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் உற்பத்தி செய்யப்படும் சேதனப் பசளைகளை தேசிய உர செயலகத்தின் ஊடாக கொள்வனவு செய்வதற்கும், நெல் உட்பட வேறு பயிர்களுக்கு ஏற்ப உரத்தை விநியோகிப்பதற்கும் தேவையான பொறிமுறை தயாரிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர்கள் சுட்டிக் காட்டினர். பெரும்போகத்துக்கு முன்னர் கிராமிய மட்டத்தில் மண் வளத்தை பரிசோதித்து, பயன்படுத்தப்பட வேண்டிய உரத்தின் அளவு குறித்து அறிக்கை ஒன்றை பெற்றுக் கொள்ளுமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்- என்றுள்ளது. (எ-4)

# துறைமுக நடவடிக்கைகள் பாதிப்பில்லை

கொழும்பு,மே 28

கொழும்பு துறைமுகத்துக்கு அருகாமையில் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றியுள்ளதால், துறைமுக நடவடிக்கைகளுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை என்று துறைமுக அதிகார சபையின் தலைவர் மேஜர் ஜெனரல் தயா ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

துறைமுகப் பணிகள் வழமைபோன்று இடம்பெற்று வருகின்றன. இலங்கை வந்துள்ள விசேட குழுவினரும், மீட்புக் குழுவினரும் கப்பலைப் பரிசோதனை செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். குறித்த கப்பலில் கடந்த 19 ஆம் திகதி தீப்பரவல் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

# கடலில் மிதந்த பொருள்களை எடுத்தவர்களுக்கு ஒவ்வாமை

கொழும்பு,மே 28

எக்ஸ்பிரஸ் பேர்ல்ஸ் கப்பலில் இருந்து, கடலில் மிதந்து வந்த பொருள்களை எடுத்துச் சென்றவர்களுக்கு ஒவ்வாமை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மிதந்து வரும் பொருள்களில் நச்சு இரசாயனங்கள் கலந்துள்ளன என்று அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்திருந்த போதிலும், எரியும் கப்பலில் இருந்து மிதந்த வந்த பொருள்களைச் சேகரித்த பலர் இவ்வாறு ஒவ்வாமையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு தோலின் மேற்பரப்பில் கொப்பளங்கள், புள்ளிகள் மற்றும் அரிப்பு இருக்கின்றன எனக் கூறப்படுகிறது. பொருள்கள் சேகரிக்கும் போது கடல்நீருக்குள் அதிகமாகச் சென்ற உடற் பாகங்களில் கொப்பளங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் அறியமுடிகின்றது. இது தொடர்பில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் தர்ஷனி லஹந்தபுர தெரிவிக்கையில்,

மக்களைப் பாதித்த இந்த ஒவ்வாமைகளுக்கு மேலதிகமாக, எதிர்காலத்தில் எதிர்பாராத விளைவுகள் ஏற்படும் அபாயம் உள்ளது. கப்பலின் கழிவுகள் தொடர்ந்து கரையை அடையும். எனவே அவற்றை மக்கள் தொட முயற்சிக்க வேண்டாம்.

கரையோர துப்புரவுப் பணியை அறிவியல் முறையில் மிக விரைவில் செயல்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன- என்றார். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஜனநாயகமும் சோசலிசமும்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசில், சோசலிசமும் ஜனநாயகமும் பெயரளவில்தான் என்றாகிப் பல காலம். இதற்கு ஆகப்பிந்திய உதாரணமாக அமைந்துள்ளன கிராம அலுவலர்களின் போராட்டமும் அதற்கு எதிராக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கையும்.

கொரோனாப் பெருந்தொற்றுக்கு எதிரான தடுப்பூசி வழங்கலில் பாரபட்சம் காட்டப்படுகின்றது என்ற குற்றச்சாட்டு கோத்தாபய அரசுக்கு எதிராக பூதாகரமான முறையில் முன்வைக்கப்பட்டுள்ளமை அனைவரும் அறிந்ததே. சுகாதாரத்துறை அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி உள்ளிட்ட சில அமைச்சர்கள் இந்த மோசடிக்குத் துணைபோயுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. தடுப்பூசி மோசடிக்கும் அதை நாட்டு மக்களுக்கு பகிர்ந்து வழங்குவதில் காட்டப்பட்ட பாரபட்சத்துக்கும் எதிராக வெளிப்படையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டு வருகின்றன.

இத்தகையதொரு பின்னணியில்தான், நீதி நிலை நாட்டப்பட வேண்டும் என்ற நோக்கில் கிராம அலுவலர்கள் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தை கடந்த 25ஆம் திகதி வியாழக்கிழமை நள்ளிரவு முதல் மேற்கொண்டு வருகின்றனர். நேர்மையும் இதயசுத்தியும் உள்ள அரசு இந்த விவகாரத்தை எவ்வாறு அணுகியிருக்கும்? உரிய விசாரணைகளை நடத்துவதற்கு என்று தனிக்குழு அமைத்திருக்கும். அல்லது விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்ற வாக்குறுதியையாவது வழங்கியிருக்கும். ஆனால், இராணுவத் திமிர் கொண்டும், அதிகார எகத்தாளம் கொண்டும் பயணிக்கும் கோத்தாபய அரசு, கிராம அலுவலர்களின் போராட்டத்தையும் எதிர்மறையாகவே கையாண்டுள்ளது.

அதாவது கிராம அலுவலர்களின் பணியை அத்தியாவசிய சேவைக்குள் உள்ளீர்த்து வர்த்தமானி வெளியிட்டுள்ளது. துறைமுகப்பணிகள், அரச வங்கிகள், பொதுப்போக்குவரத்துப் பணிகள், பெற்றோலியத் துறைசார் பணிகளுடன் கிராம அலுவலர்களின் பணியும் அத்தியாவசியமானது என்று பெயரிடப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பணிக்குள் உள்ளீர்க்கப்பட்டால் அந்தத்துறையினர் பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ள முடியாது என்பது அனைவரும் அறிந்ததே. ஆக, கிராம அலுவலர்களின் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் தற்போது குறுக்கு வழியில் செல்லுபடியற்றதாக ஆக்கப்பட்டுள்ளது.

தன் மீதான விமர்சனத்தை நேரிய – சீரிய வழியில் எதிர்கொண்டு, அதற்கு உரிய தெளிவூட்டல்களை நாட்டு மக்களுக்கு வழங்கத் திராணியற்ற இந்த அரசு எவ்வாறு தனக்கெதிராகத் தோற்றம்பெறும் விமர்சனங்களையும், கருத்தியல்களையும் கையாள்கின்றது என்பதற்கு கிராம அலுவலர்களின் போராட்டமும் அதற்கு எதிராக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலும் ஆகச்சிறந்த உதாரணங்களாகக் கட்டியம் கூறுகின்றன.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசில் தடுப்பூசி பகிர்ந்தளிப்பதில் 'சோசலிசம்' என்பது இருக்கவில்லை. அது ஏன்? என்று ஜனநாயக வழியில் கேட்கப்போனால் 'ஜனநாயகம்' என்பதற்கும் இடமில்லை. அதுசரி கொரோனாவைக் கட்டுப்படுத்தும் திட்டத்தை முழுக்கமுழுக்க இராணுவத்திடம் கொடுத்த ஜாம்பவான்கள் அல்லவா அவர்கள். அத்தகையவர்களிடம் நீதியையும், நேர்மையையும், இதய சுத்தியையும் எதிர்பார்ப்பது அவர்களின் தவறல்ல எமது தவறுதான்.

உண்மையில் இலங்கை ஆசியாவின் அதிசயம்தான். ஆனால் இந்த விடயம் ஆசியாவுக்கே தெரியாது.



### சைனோஃபோர்மின்

# இரண்டாவது டோஸுக்குரிய தடுப்பூசிகளே அதிகம்!!!

### இராணுவத் தளபதி தெரிவிப்பு




**கொழும்பு, மே 28**
**சீனாவால் இரண்டாம் கட்டமாக நன்கொடையாக வழங்கப்பட்ட 5 லட்சம் சைனோஃபோர்ம் தடுப்பூசிகளில் இரண்டாவது டோஸுக்குரியவையே அதிகம்.**

இவ்வாறு கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணியின் தலைவரும், இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா தெரிவித்தார்.
இலங்கைக்கு சீனா நன்கொடையாக 6 லட்சம் தடுப்பூசிகளை ஏப்ரல் மாதம் வழங்கியிருந்தது.
இரண்டாம் கட்டமாக 5 லட்சம் தடுப்பூசிகள் நேற்றுமுன்தினம் கிடைக்கப்பெற்றன.
இரண்டாம் கட்டமாக கிடைக்கப்பெற்ற தடுப்பூசிகளில் 3 லட்சத்து 75 ஆயிரம் தடுப்பூசிகள் இரண்டாம் டோஸுக்குரியவை.
முதலாவது டோஸுக்கு உரிய ஒரு லட்சத்து 25 ஆயிரம் தடுப்பூசிகளும் குருநாகல், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று இராணுவத் தளபதி குறிப்பிட்டார். (ஒ.5.இ)

# கடலுணவுகளை உட்கொள்ள மக்கள் தயங்கத் தேவையில்லை

### கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு மே 28
கடலுணவுகளை உட்கொள்வதற்கு மக்கள் தயங்கத் தேவையில்லை என்று தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கப்பல் விபத்துக்குள்ளான கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்ட கடல் பிரதேசத்தில் மீன்பிடி செயற்பாடுகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.
கொழும்பு துறைமுகத்துக்கு இரசாயனப் பொருள்கள் அடங்கிய கொள்கலன்களை ஏற்றிவந்த சரக்கு கப்பலில் ஏற்பட்ட வெடி விபத்தின் காரணமாக உயிரினங்களுக்கு கேடு ஏற்படுத்தக்கூடிய இரசாயனப் பதார்த்தங்கள் கடலில் கலந்திருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகின்றது.
இது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்:
கடல் வாழ் உயிரினங்களுக்கு பாதிப்புக்கள் ஏற்பட்டிருப்பதாக உறுதிப்படுத்தப்படவில்லை. கடலில் கலந்திருக்கக் கூடிய பாதார்த்தங்கள் தொடர்பாகவும், அவற்றால் உருவாக்கக்கூடிய தாக்கங்கள் தொடர்பாகவும் கண்டறிவதற்கான ஆய்வுகளில் நாரா எனப்படும் தேசிய நீரியல்வள ஆராய்ச்சி நிறுவனம் ஈடுபட்டுள்ளது. ஆராய்ச்சி அறிக்கை கிடைக்கும் வரையில், சம்மந்தப்பட்ட கடல் பிரதேசத்தில் மீன்பிடிச் செயற்பாடுகளுக்கான தடையை இறுக்கமாக நடைமுறைப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பேலியகொட உட்பட நாடளாவிய ரீதியில் உள்ள சந்தைகளில் கொழும்பு மற்றும் கம்பஹா போன்ற சந்தேகத்துக்கு இடமான கடல் பிரதேசங்களைத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட கடலுணவுகளே விற்பனை செய்யப்படுகின்றன என்ற அடிப்படையில், அவற்றை உட்கொள்வது தொடர்பாக மக்கள் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை- என்றார். (ஒ.இ)

# தடுப்பூசி போடுவதில் தலையீடு

கொழும்பு மாவட்டத்தின் மொறட்டுவை பிரதேசத்தில் அமைந்துள்ள கொரோனாத் தடுப்பூசி நிலையத்தில் நேற்று பதற்றமான நிலைமை தோன்றியது.
மொறட்டுவை நகர சபைத் தலைவர் மற்றும் பிரதேச சுகாதார அதிகாரிகளுக்கு இடையில் ஏற்பட்ட முறுகல் நிலை இந்த பதற்றத்துக்கு காரணமாக அமைந்தது. 'நான் வழங்கிய சீட்டுக்கு அமைய தடுப்பூசி வழங்கப்படவில்லை' என்று நகர சபை தலைவர் குற்றம் சுமத்தியுள்ளார்.
எனினும் தனக்கு வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைய தடுப்பூசியை வழங்கப்படுகிறது என சுகாதார வைத்திய அதிகாரி கூறியுள்ளார்.
மொறட்டுவை நகர சபை தலைவர் தனது கடமைக்கு தடையேற்படுத்தினார் என சுகாதார மருத்துவ அதிகாரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டமிடல் தவறுகளால் அல்லலுறும் மக்கள்

## சாள்ஸ் எம்.பி. குற்றச்சாட்டு

மன்னார், மே 28



கொரோனாவின் மூன்றாவது அலையைக் கட்டுப்படுத்துவதில் அரசின் தவறான திட்டமிடல்கள் காரணமாக பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

வைரஸைக் கட்டுப்படுத்தும் வகையில் அரசின் செயற்பாடுகள் இல்லை. சுகாதாரத் துறையினரை ஓரங்கட்டி இராணுவத்தை முன்னிலைப்படுத்தியதன் விளைவுகளால் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்ததுடன், உயிரிழப்புக்களும் பல மடங்காகியுள்ளன.

பல குடும்பங்கள் தற்போது தனிமைப்படுத்தப்படுகின்றன. அவற்றுக்குரிய அத்தியாவசியப் பொருள்கள் உரிய நேரத்தில் கிடைக்கப்பெறாத நிலைமை காணப்படுகின்றது.

அரசு அறிவித்துள்ள பயணத் தடையால் நாளாந்த உழைப்பாளிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு நிவாரணம் வழங்க அரசு முன்வரவேண்டும், என்றார். (ஒ,213)

# ஆடைத் தொழிற்சாலை பணியாளர்களின் உறவினர்களுக்கு தொற்று அறிகுறி!

## பெரும் கொத்தணி உருவாகும் அபாயம்

**முல்லைத்தீவு, மே 28**



**"புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றாளர்களால் அவர்களின் குடும்ப உறுப்பினர்களில் வயதானவர்கள் பலர் நோய் அறிகுறிகளுடன் மருத்துவமனைக்கு வருகின்றார்கள். அவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை செய்தபோது தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்படுகின்றது." இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட தொற்றுநோய்த் தடுப்பு பிரிவு மருத்துவ அதிகாரி வி.விஜிதரன் தெரிவித்துள்ளார்.**

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கொவிட் 19 தொடர்பான கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஆடைத் தொழில்சாலையில் பணியாற்றுபவர்கள் பெரும்பாலும் இளையோரே. இவர்களுக்கு கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டாலும் அதன் தாக்கம் பெரிய ளவில் காட்டவில்லை. ஆனால் அவர்களின் வீடுகளில் உள்ள வயோதிபர்கள் தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் சம்பவங்கள் பதிவாகி வருகின்றன.

தற்போது மருத்துவமனையில் பி.சி.ஆர். எடுப்பவர்களில் அரைவாசி வீதமானவர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்படுகின்றது. அவர்களின் வயது 45 அகவைக்கு மேற்பட்டதாக காணப்படுகின்றது.

நோயாளர்களை எதிர்கொள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் தயார்நிலையில் இருக்கின்றோம். இருக்கக்கூடிய வளத்தை பயன்படுத்தி செயற்படவுள்ளோம். முல்லைத்தீவு மாவட்டம் தான் ஆகக்குறைந்த மனிதவளம் கொண்ட ஒரு மாவட்டமாக காணப்படுகின்றது. இந்த நிலையில் மனிதவளம் என்பது எங்களுக்கு சவாலாக இருக்கின்றது இதனை விட மருத்துவ ரீதியில் உட்கட்டமைப்பு வசதிகள் தேவையாக உள்ளன - என்றார். (ஐ-19)

### மன்னார் மாவட்டத்தில்

# கொரோனா அவசரகால நிலையில் தொடர்புகொள்ள குழு அமைப்பு

மன்னார், மே 28

மன்னார் மாவட்டத்தில் கொரோனா அவசரகால நிலையில் தொடர்புகொள்வதற்கு என்று குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் தற்போதைய கொரோனா இடர் சூழ் நிலையில் அவசிய ஆலோசனை மற்றும் கொரோனா பாதிப்புக்குள்ளானோர் தொடர்பான தகவல் வழங்குதல் மற்றும் பெற்றுக்கொள்வதற்கு மக்கள் பின்வரும் இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்த முடியும் என்று மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தெரிவித்துள்ளார்.

மன்னார் நகர பிரதேசம் எல். யூட் றொகான் (0712345688), முசலி பிரதேசம் ஆர்.ஜெ.யூட் மைக்கல் ராஜ் (0770585816), நானாட்டான் பிரதேசம் என்.விமலேந்திரகுமார் (0779079935)மாந்தை மேற்கு பிரதேசம் எஸ். யூட் றெமிஜன் (077664 5058) மடு பிரதேசம் எஸ். டெனிஸ்ரன் (0771226321) ஆகியோருடன் தொடர்பை மேற்கொண்டு தகவலை பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-213)



# சிகிச்சை நிலையங்களுக்கு தண்ணீர்ப் போத்தல்கள்

மன்னார்,மே 28

மன்னார் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையங்களுக்கு ஒரு தொகுதி குடிதண்ணீர்ப் போத்தல்கள் வழங்கப்பட்டன.

மன்னார் மெசிடோ நிறுவனத்தால் மன்னார் மாவட்ட செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெலிடம் நேற்று முன்தினம் தண்ணீர்ப் போத்தல்கள் கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் மன்னார் மாவட்ட உதவிச் செயலர் சிவபாலன் குணபாலன்,மன்னார் இடர் முகாமைத்துவ அதிகாரி கனகரத்தினம் திலீபன் மற்றும் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-213)



# கொரோனா தொற்றாளர் சிக்கினார்

கொழும்பு,மே 28

தனியார் மருத்துவமனையிலிருந்து தப்பிச் சென்ற கொரோனாத் தொற்றாளர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொள்ளுப்பிட்டியில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இவர், கடந்த 25 ஆம் திகதி தப்பிச் சென்றுள்ளார். தற்போது தமண பிரதேசத்தில் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதிப் பொலிஸ்மாஅதிபர் அஜித்ரோஹண தெரிவித்துள்ளார். (எ-4)

# சுகாதார ஊழியர்களுக்கும் தடுப்பூசி ஏற்றுங்கள்!

## அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் கோரிக்கை



கிளிநொச்சி, மே 28

கொரோனா இடைநிலை சிகிச்சை மையங்களில் உள்ளூராட்சி மன்றங்களின் சுகாதார ஊழியர்கள் பணிபுரிகின்றனர். அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் முன்னுரிமை அடிப்படையில் கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்படவேண்டும். இவ்வாறு அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் வடக்கு மாகாண இணைத் தலைவர் ஆறுமுகம் புண்ணியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

உள்ளூராட்சி மன்றங்களில் 3 ஆண்டு ... ரத்துக்கு மேற்பட்ட சுகாதார ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.

தற்போதைய கொரோனா நெருக்கடிக்குள் அவர்கள் இடைநிலை சிகிச்சை மையங்களிலும் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். எனவே அவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

நிரந்த நியமனம் இல்லாமல் தொடர்ந்தும் பணியாற்றும் அவர்களுக்கு நிரந்தர நியமனத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். அத்துடன் இடைநிலை சிகிச்சை நிலையங்களில் பணியாற்றும் அவர்களுக்கு சிறப்புக் கொடுப்பனவை வழங்கவும் முன்வரவேண்டும் - என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளின் விடுதலைக்காக ஒன்றாகியிருப்பவர்கள் பிரியக்கூடாது

## தமிழ் அரசியல் கட்சிகளைக் கோருகிறார் அருட்தந்தை சக்திவேல்



**வவுனியா, மே 28**

**தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக ஒன்றுசேர்ந்துள்ள தமிழ் அரசியல் கட்சிகள், கருத்து வேறுபாடுகள் காரணமாக பிரிந்துபோய் விடக்கூடாது. அது அவர்களின் விடுதலையைப் பாதிக்கும். அதற்கு இடமளிக்கக் கூடாது. இவ்வாறு அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளரான அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;
தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் மூன்றும் நேர்கோட்டில் சந்திக்க முடியாத நிலையில் இருந்தாலும், அரசியல் கைதிகளின் விடுவிப்புக்காக வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்தனவை ஒன்றாகச் சந்தித்துப் பேச்சு நடத்தியமை வரவேற்கத்தக்கது.

அந்தப் பேச்சின்போது தமிழ்த் தேசியக் கட்சிகள் முன்வைத்த கோரிக்கைகளின் விவரங்கள் தெரியவில்லை. ஆனால் தண்டனைக் கைதிகள், விசாரணையில் உள்ளவர்கள் யார் என்ற விவரங்களை வழங்கியிருக்கின்றார்கள்.

தண்டனைக் கைதிகளை விடுவியுங்கள், வழக்குகளைத் துரிதப்படுத்துங்கள் என்று தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் கோரியிருப்பார்கள் போல் தெரிகின்றது. இது எங்களுக்குத் தேவையில்லை.

அரசியல் கைதிகளை அரசியல் கைதிகளாக மாத்திரம் நோக்க வேண்டும். அவர்களைப் பிரிக்கக் கூடாது. அரசியல் தீர்மானத்தின் அடிப்படையில் அவர்கள் விடுவிக்கப்படவேண்டும் - என்றார்.

(ஓ,110)

# சந்தைகளில் தேங்காய்களின் விலையில் பெரும் வீழ்ச்சி



சாவகச்சேரி, மே 28
சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் சந்தைகளில் தேங்காயின் விலை பெருவீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த 25 ஆம் திகதி பயணத் தடை தளர்த்தப்பட்டதையடுத்து சந்தைகள் திறக்கப்பட்டன. அவ்வேளையில் பெருமளவான மக்கள் தேங்காய்களை சந்தைகளுக்கு விற்பனைக்கு கொண்டு வந்தனர். தென்பகுதி உற்பத்தி நிறுவனங்களுக்கு தேங்காய்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் பயணக் கட்டுப்பாடு காரணமாக, அவற்றை கொண்டுசெல்ல முடியாத நிலையில் சந்தைகளில் தேங்காய்கள் தேங்கிக் காணப்பட்டன.

இதையடுத்து தேங்காய்களின் விலையில் பெருவீழ்ச்சி ஏற்பட்டது. 50 ரூபா தொடக்கம். 70 ரூபா வரை விற்பனைசெய்யப்பட்ட தேங்காய்கள் 30 ரூபா தொடக்கம் 35 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டன.

தொடர்ச்சியாக சந்தைகள் மூடப்படும் என்பதால் சில்லறை வியாபாரிகளும் அதிக அளவில் தேங்காய்களை கொள்வனவு செய்யவில்லை. இதனாலும் விலையில் பெருவீழ்ச்சி ஏற்பட்டது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

(ஐ-9)



# பல்வேறு திருட்டுச் சம்பவங்கள்: சந்தேகத்தில் ஐவர் கைது

வவுனியா,மே 28
பயணத் தடையை பயன்படுத்தி திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 5 பேரை வவுனியா பூவரசங்குளம் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

வவுனியா பூவரசங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள மூன்று ஆலயங்கள் மற்றும் வீடுகளில் தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள் மற்றும் உண்டியல்கள் என்பவை திருட்டுப்போயுள்ளமை தொடர்பில் பூவரசங்குளம் பொலிஸில் முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் வாரிக்குட்டியூர், தாலிக்குளம் மற்றும் குருக்கள் புதுக்குளம் பகுதிகளைச் சேர்ந்த 5 பேரை கைதுசெய்துள்ளனர்.

அவர்களிடமிருந்து 6 தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள், ஒரு உண்டியல் மற்றும் ஒலி பெருக்கி சாதனங்கள் என்பவற்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் 19 - 24 வயதுக்குட்பட்டவர்கள் என தெரிவித்த பொலிஸார், மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(ஐ-110)

# காணாமற்போன மீனவர்களை தேடும் பணிகள் மும்முரம்

திருகோணமலை,மே.28
திருகோணமலை, திருக்கடலூரில் இருந்து கடந்த 23 ஆம் திகதி தொழிலுக்குச் சென்ற 3 மீனவர்கள் இதுவரை கரை திரும்பாத நிலையில், அவர்களைத் தேடும் பணியில் கடற்றொழிலாளர் சங்கங்கள் ஈடுபட்டு வருகின்றன

தேடுதல் நடவடிக்கை காரணமாக கடற்றொழிலாளர் சங்கங்களின் தீர்மானத்துக்கு அமைய கடலுக்கு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால் 2ஆயிரத்துக்கும் இற்கும் அதிகமான மீனவர்கள் கடலுக்குச் செல்லாமல் காணாமல் போனவர்களை எதிர்பார்த்து கடற்கரையில் காத்து நிக்கின்றனர்.

(ஐ-40)



# இராணுவத்தின் பிடியில் பிரதேச சபையின் கிணறு

## தவிசாளர் விசனம்

கிளிநொச்சி, மே 28
கிளிநொச்சி இயக்கச்சியில் அமைந்துள்ள பிரதேச சபைக்குரிய கிணற்றை இராணுவத்தினர் பிரதேச சபையிடம் கையளிக்கவில்லை என பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;
கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன்னர் ஜனாதிபதி செயலகத்தால் குறித்த கிணறு பிரதேச சபையிடம் கையளிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டு குழு ஒன்றும் குறித்த கிணற்றைப் பார்வையிட்டது. இராணுவமும் கிணற்றை பிரதேச சபையிடம் கையளிப்பதற்கு இணக்கம் தெரிவித்திருந்தது. ஆனால் இதுவரை கிணறு கையளிக்கப்படவில்லை. கிணற்றில் இருந்து பிரதேச சபை குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்ள முடியும். இராணுவத்தின் பொறுப்பில் தான் குறித்த கிணறு தற்போது உள்ளது.

இராணுவமும் கூடுதலான தண்ணீரைப் பயன்படுத்துகின்றது. இயக்கச்சி கிணறு பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்டிருந்தால் வறட்சி காலங்களில் குடிதண்ணீர் விநியோகத்தை இலகுவாக மேற்கொள்ளலாம். ஆனால் தற்போது குடிதண்ணீர் வழங்கலில் பிரதேச சபை நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது - என்றார்.

(ப-13)

# மாற்றுப் பாதைகளூடாக டிப்பர்கள் பயணிக்கவும்

## அக்கராயன் நாகதம்பிரான் கமக்கார அமைப்பு வேண்டுகோள்

கிளிநொச்சி.மே 28
கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் இருந்து முக்கொம்பன் வழியாக பயணிக்கும் டிப்பர்கள் மாற்று வழிகளை பயன்படுத்தவும் என்று அக்கராயன் நாகதம்பிரான் கமக்கார அமைப்பின் தலைவர் சி.கனகசபாபதி அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;
கிளிநொச்சி ஸ்கந்தபுரம் முக்கொம்பன் வீதி பெரும் குன்றுங் [illegible] பாக மணலுடன் டிப்பர்கள் பயணிப்பதன் காரணமாக குறித்த வீதி பெரும் குன்றுங்குழியுமாக மாறி உள்ளது. பூநகரி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒன்றில் குறித்த வீதியில் டிப்பர்கள் பயணிக்கக்கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. காரணம் ஸ்கந்தபுரம், முக்கொம்பன், பூநகரி 10 ஆம் கட்டை வரையான வீதியில் டிப்பர்கள் பயணிப்பதனால் வீதி சேதம [illegible] டிப்பர்கள் பயணிக்க முடியாது என்ற தீர்மானம் உள்ள நிலையிலும் டிப்பர்கள் பயணிப்பதனால் முக்கொம்ப னுக்கும் ஸ்கந்தபுரத்துக்கும் இடையிலான வயல் வீதி மக்கள் பயணிக்க முடியாத அளவுக்கு சேதமடைந்துள்ளது. குறித்த வீதியை விரை வாக சீரமைப்பதற்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

(ஐ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் தேவைகளுக்கே நெருக்கடிக்குள் தீர்வு

## அஜித் மன்னபெரும தெரிவிப்பு

கொழும்பு,மே 28
நாட்டில் கொரோனாத் தொற்று நெருக்கடிக்குள்ளும், அரசின் ஒவ்வொரு தேவைகளும் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளன. இவற்றால் மக்களுக்கு எந்தவித மீட்சியும் கிடைக்கவில்லை.
இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னபெரும தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
கொரோனாத் தொற்றின் முதலாவது அலையில் தேர்தலும், இரண்டாது அலையில் 20 ஆவது திருத்தச் சட்ட வரைவும், மூன்றாவது அலையில் கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட வரைவும் நிறைவேற்றப்பட்டுள்ளன.
கொரோனா வைரஸிலிருந்து நாட்டு மக்களை மீட்டெடுப்பதற்கு அரசு கொண்டிருந்த நிகழ்ச்சி நிரல்கள் இவை தானா? கொரோனா தொடர்பில் நிபுணர்களின் கருத்துகளைப் புறந்தள்ளி விட்டு, தடுப்பூசிகள் இலவசமாகக் கிடைக்கும் வரையில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றது அரசு.
அதேவேளை தடுப்பூசி விடயத்தில் அரசியல் தலையீடுகளும் உள்ளன. கொரோனாவை விட தடுப்பூசியால் பெரும் நெருக்கடி ஒன்றுக்குள் நாடு சிக்கி யுள்ளது- என்றார். (எ-4)


# இலங்கைக்கு எந்தவித அச்சுறுத்தலும் இல்லை

## பாதுகாப்பு செயலாளர் தெரிவிப்பு



**கொழும்பு, மே 28**
**இலங்கை எந்தவித பயங்கரவாத அச்சுறுத்தலையும் எதிர்கொள்ளவில்லை என்று பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரட்ண தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், அமெரிக்கா வெளியிட்டுள்ள பயண எச்சரிக்கையை அடிப்படையாகக்கொண்டு, இலங்கை பயங்கரவாத அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றது என்று தகவல்கள் வெளியாகி வருகின்றன. இது பொய்ப் பிரசாரம்.
பாதுகாப்பு அமைச்சு மற்றும் முப்படையினர், சட்டத் தரப்பினர் ஆகியோர் இணைந்து நாட்டின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். என்றார். (எ-4)



# 76,000 வீடுகளில் மின்சாரம் துண்டிப்பு

கொழும்பு,மே 28
நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக, சுமார் 76 ஆயிரம் வீடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது என்று மின்சக்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஸனா ஜயவர்தன தெரிவித்துள்ளார்.
தம்புள்ளை, குருநாகல், இரத்தினபுரி, கேகாலை, ஹொரணை, இங்கிரிய, பலாங்கொடை மற்றும் குளியாப்பிட்டி ஆகிய பகுதிகளில் இவ்வாறு மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கடும் காற்று வீசி வருவதால், பல பிரதேசங்களில் தொடர்ந்தும் மின்சாரம் துண்டிக்கப்படும் சாத்தியம் உள்ளது.
மின்சாரம் துண்டிக்கப்பட்ட பகுதிகளில் மின்சார விநியோகத்தை வழமைக்கு கொண்டு வருவதற்கு விசேட குழுவினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

# சிறுவர்களின் எதிர்காலத்துடன் விளையாடுகின்றார் ஜனாதிபதி

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு



கொழும்பு,மே 28
கொரோனாத் தொற்றால் நாட்டில் நெருக்கடியை ஏற்படுத்தி, சிறுவர்களின் எதிர்காலத்துடன் விளையாடுகின்றார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச.
இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திசநாயக்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாட்டில் நெருக்கடி நிலைமையை ஏற்படுத்தியமைக்கு யார் காரணம் என்று ஜனாதிபதி தன்னைத் தானே கேட்டுக்கொள்ள வேண்டும். சுய அலசலை மேற்கொள்ள வேண்டும். அப்போது அவருக்கு அதற்கான காரணம் தெரியும்.
மாறாக கொரோனாவைத் தாங்களே சிறப்பாகக் கட்டுப்படுத்தியுள்ளனர் என்று புகழ்பாடுவதால் எந்தப் பயனும் இல்லை. அவ்வாறான கருத்துக்கள் கொரோனாத் தொற்று அதிகரிப்பதற்கே வழி வகுக்கும்- என்றார். (எ-4)

# கரையொதுங்கிய பொருள்களை அள்ளிச்சென்ற 8 பேர் கைது

கொழும்பு,மே 28
தீப்பற்றியுள்ள 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' கப்பலில் இருந்து கரையொதுங்கிய பொருள்களை எடுத்துச் சென்ற 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.
தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பமுனுகம, நீர்கொழும்பு, கொச்சிக்கடை, டுங்கல்பிட்டிய ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள் ளனர். இவர்களில் மூவர் லொறியுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)



# திட்டங்களை புறக்கணித்ததால் மாணவர்களின் கல்வியே பாழ்

## முன்னாள் கல்வி அமைச்சர் ஆதங்கம்

கொழும்பு, மே 28
நல்லாட்சி அரசின் காலத்தில் கல்வியை முன்னேற்ற முன்வைக்கப்பட்ட பல திட்டங்கள் இன்று இடைநிறுத்தப்பட்டுள்ளன. அதனால் மாணவர்களே பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர் என்று முன்னாள் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
எமது நல்லாட்சி அரசால் முன்னெடுக்கப்பட்ட கல்வித்துறைசார் புதிய வேலைத்திட்டங்கள் பல இடைநிறுத்தப்பட்டுள்ளன. கடந்த ஒன்றரை வருடங்களாக மாணவர்களுக்கு முறையான கல்வித் திட்டங்கள் இல்லை. அன்று மாணவர்களுக்கு ரப்களை வழங்க நாங்கள் நடவடிக்கை எடுத்தபோது, அதற்கு எதிராக கற்போகைய அரசு நடவடிக்கை எடுத்தது. அதன்மூலம் மாணவர்களுக்குக் கிடைக்கவிருந்த பயன்கள் இன்று இல்லாமல் போயுள்ளன. அனைத்து மாணவர்களுக்கும் கல்வி கற்கும் உரிமை இருக்கின்றது. இருப்பினும், சகல மாணவர்களாலும், கணினி, ரப், ஸ்மார்ட் போன்களைப் பெற்றுக்கொள்ள முடியாது.
அவ்வாறான மாணவர்களுக்காக, தொலைகாட்சி சேவைகளைப் பயன்படுத்தும் நடவடிக்கையை எடுக்க வேண்டும். ஆனால், இன்று அவ்வாறான எந்தவொரு வேலைத்திட்டமும் அரசிடம் இல்லை. கொரோனாவைக் கட்டுப்படுத்தல், பொருளாதாரம், சுகாதாரம் மற்றும் கல்வி உள்ளிட்ட அனைத்து விடயங்களிலும் அரசு தோல்வியடைந்துள்ளது- என்றார். (ம-4)

# எரிபொருள் சுத்திகரிப்பு நிலையங்கள் சீரமைப்பு

கொழும்பு,மே 28
சப்புகஸ்கந்தவில் புதிய எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்கும், ஏற்கனவே உள்ள நிலையத்தைப் புதுப்பிப்பதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
புதிய நிலையம் ஊடாக, நாளாந்தம் ஒரு இலட்சம் பீப்பாய் மசகு எண்ணெய் சுத்திகரிக்கப்படவுள்ளது.
அத்துடன் தற்போதுள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் நாளாந்தம் 45 ஆயிரம் பீப்பாய் எண்ணெய்யை சுத்திகரிக்க கூடியவாறு புதுப்பிக்கப்படவுள்ளது என்று அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.
இந்த இரண்டு செயற்றிட்டங்களுக்கும் 600 பில்லியன் ரூபா நிதி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. நாட்டில் முன்னெடுக்கப்படும் மிகப் பெரிய முதலீட்டுத் திட்டங்களில் இதுவும் ஒன்று என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணிவிழா காணும் சிவபூமிநாயகன்



ஜெயக்குமார் ஜெயவினோதனன்,
மாணவன்
சென்.ஜோன்ஸ் கல்லூரி.

ஈழத்தின் சிரகமென திகழும்
யாழ்ப்பாணத்தின் வலிகாமம்
வடக்கு இணுவில் கிராமத்தில்
சீரும் சிறப்புடன் வாழ்ந்தோர்
அமரர் ஆறுமுகம் சரஸ்வதி தம்பதி
கள். அவர்களின் தவப்பேறினால்
ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, குகமூர்த்தி, குககு
மாரி, கோணேஸ்வரி, திருமுகன்,
விக்னேஸ்வரி, கேதீஸ்வரி என்று ஏழு
பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர்.
திருமுகன் எனும் இயற்பெயருடன்
பிலவவருடம் வைகாசி விசாக நட்சத்
திரம் 28.05.1961ஆம் ஆண்டு
உதித்தவரே செஞ்சொற்செல்வர் என
வையகம் போற்றும் ஆறுதிருமுகன்.
ஆரம்பக் கல்விக்காக சுன்னாகம்
இராமநாதன் கல்லூரியிலும் யாழ்ப்
பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை
யிலும் இணைந்துகொண்டார்.

இடைநிலை கல்வியைத் தொடர
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில்
இணைந்து உயர்தரத்தில் விஞ்ஞான
பிரிவை தேர்ந்தெடுத்து உயர்தரத்தில்
சிறந்த பெறுபேற்றை எட்டினார்.

உயர்கல்வி வேண்டி மத்திய மலை
நாட்டில் காணப்படும் பேராதனைப்
பல்கலைக்கழகத்திலேயே விஞ்ஞான
பீடத்தில் இணைந்து பட்டதாரியா
னார். பட்டம் பெற்ற அவர் பட்டப்படிப்
பின் பின் படிப்பை மஹரகம தேசிய
கல்வி நிறுவனத்தில் பயின்று அத
னையும் பூர்த்திசெய்தார்.

## ஆசிரிய சேவை

தனது முதல் ஆசிரிய நியமனப் பத்
திரத்துடன்சுன்னாகம் திருஞான சம்
பந்தர் வித்தியாசாலையில் 1989ஆம்
ஆண்டு இணைந்து கொண்டார்.
1993ஆம் ஆண்டு இப்பாடசாலையி
லிருந்து இடமாற்றம் பெற்று கந்த
ரோடை ஸ்கந்தவரோதயா கல்லூரி
யில் பகுதித் தலைவராக சேவையைத்
தொடர்ந்தார்.

இவரின் தாய் தந்தை ஆசிரியராக
கடமையாற்றிய வேளை துர்க்காதேவி
தேவஸ்தான தலைவர் சிவத்தமிழ்
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
அம்மையாருடன் அறிமுகமானார்.
அவ்வாறே தெல்லிப்பழை துர்க்கை
அம்மன் ஆலயத்துக்குச் சென்று வரு
கையில் சிவத்தமிழ் செல்வி அம்மை
யாரின் அன்புக்கு அடிமையானார்.
தனது 32ஆவது வயதில், கலாநிதி
தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையா
ரின் பிறந்தநாள் அறநிதியசபை
உறுப்பினராக 1993ஆம் இணைந்து
கொண்டார். தனது சொற்பொழிவு
களை தேவஸ்தானத்தில் அம்மையா
ரின் முன்னிலையில் நிகழ்த்தி ஆசி
பெற்றார். 1995ஆம் ஆண்டு தேவஸ்
தான நிர்வாக சபை உறுப்பினராக
தெரிவு செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில்
மாணவனாக இருந்த காலத்தில் திரு
முருகன் பங்குபற்றி சொற்பொழிவு
களின் மற்றும் மேடைப்பேச்சின்
அனுபவமும் ஈழத்தின் பல பாகங்க
ளிலும் அவர் ஆற்றிய சொற்பொழி
வுகளின் சிறப்பினாலும் மக்களிடமி
ருந்து நன்மதிப்பை பெற்றார். ஈழத்
தின் பல பாங்களிலும் புலம்பெயர்
தேசங்களில் எம் தமிழர்கள் வாழ்
கின்ற பிரதேசங்களிலும் தனது ஆன்
மிகசொற்பொழிவுகளை சைவத்தை
யும் தமிழையும் வளர்க்கும் நோக்கில்
ஆற்றினார்.

## பெருமை தேடித் தந்தவர்

தனக்கு கிடைக்கும் வெகுமதிகளை
யும் நெல்மூட்டைகளையும் துர்க்கா
தேவி தேவஸ்தான மகளிர் இல்லத்
துக்கும், சைவவித்தியாவிருத்திச் சங்
கத்துக்கும் அன்பளிப்பாக கொடுத்து
மகிழ்ந்தார். 1999ஆம் ஆண்டு
சைவத்திருக்கோயில்களின் ஏற்பாட்
டில் இங்கிலாந்தில் நடைபெற்ற அகில
உலக இந்துமாநாட்டில் பங்குபற்றி
உரையாற்றி ஈழத் திருநாட்டுக்கு
தேடிக்கொடுத்தார். இவை ஒரு பக்கத்
தில் சிறப்புடன் திகழ ஸ்கந்தவரோ
தயா கல்லூரியின் உப அதிபராகவும்
பிரதி அதிபராகவும் பணி
யாற்றி 2008ஆம் ஆண்டு
மார்ச் மாதம் 16ஆம் திகதி அதி
பராக பதவி உயர்வு பெற்றார்.

இதேவருடம் துர்க்காதேவி தேவஸ்
தான தலைவராக 32 வருடங்களாக
உன்னத பணியாற்றிய சிவத்தமிழ்
செல்வி அம்மையாரின் மறைவுக்கு
பின் 29ஆம் திகதி 8ஆம் மாதம்
2008ஆம் ஆண்டு நிர்வாகசபை
தலைவராக பொதுக்கூட்டத்தின்
போது அடியார்களால் ஏகமனதாக
தெரிவு செய்யப்பட்டார். அதனைத்
தொடர்ந்து சிவத்தமிழ் செல்வி
அம்மை யாரின் பெயரில் நவகோண
வடிவில் கலசங்களுடனான நினை
வாலயத்தை ஆலய மேற்கு பகுதியில்
அமைத்து அம்மையாரின் 84ஆவது
பிறந்தநாள் அன்று திறந்து வைத்தார்.
சமயத்துக்காகவும் சமூகத்துக்காகவும்
தன்னாலான பணிகளை முன்னெ
டுத்து செல்வதை இலகுவாக்கும்
நோக்குடன் தனது ஐம்பதாவது வய
தில் அரச பதவிகளை ஓய்வுறுத்தி
தனது சமய சமூகப்பணிகளை முழு
நேரமாக ஆற்றிவருகின்றார். இவரது
ஆசிரிய சேவையை பாராட்டும் வகை
யில் 1991ஆம் ஆண்டு யாழ். மாவட்ட
கல்வித் திணைக்களமும் 2002ஆம்
ஆண்டு வலிகாமம் கல்வி வலயமும்
நல்லாசிரியர் விருதை வழங்கி கௌர
வித்தன. 1965ஆம் ஆண்டு கிழக்கு
வாசல் கோபுரம் அமைக்கப்பட்டாலும்
2017ஆம் ஆண்டு தென்திசை கோபு
ரத்தின் கும்பாபிசேகத்தையும்,
2018ஆம் ஆண்டு வடதிசை கோபு
ரத்தின் கும்பாபிசேகத்தையும்,
2019ஆம் ஆண்டு மேற்திசை கோபு
ரத்தின் கும்பாபிசேகத்தையும் அவர்
தலைமையில் நிறைவேற்றினார்.
எம்சமயம் வளர்த்த நான்கு நாயன்
மார்களின் சிலைகளையும் கும்பகோ
ணத்திலிருந்து வரவழைத்து 2014
ஆம் ஆண்டு இவர் தலைமையில்
பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபி
சேகம் நடைபெற்றது.

## புத்துயிர் பெற்ற பணிகள்

இந்துசமய கலாசார அலுவல்கள்
திணைக்களத்தின் 30ஆவது ஆண்டு
விழாவில் சைவத்துக்கும் தமிழுக்கும்
சமூகத்துக்கும் துர்க்காதேவி தேவஸ்
தானத்துக்கும் ஆற்றிவரும் சேவை
களை பாராட்டிக் கௌரவிக்கும் வகை
யில் நாவலர் விருது வழங்கப்பட்டது.
அன்னை சிவத்தமிழ் காலத்தில் சுன்
னாகத்தில் திருமகள் அழுத்தகம்
ஆலயத்தின் உடைமையாக்கப்பட்டா
லும் தொடர்ந்து இயங்க முடியாத
நிலையில் செயலற்று காணப்பட்டது.
தனது காலத்தில் அதனை மீள புத்து
யிர்கொடுத்து சுன்னாகத்தில் அதேநி
லத்தில் மூன்றுமாடி மருத்துவ
சேவைக்கட்டம் திருமகள் புத்தக
சாலை, திருமகள் அமுதகம் என்
பவை கடந்த ஆண்டு திறந்து வைக்
கப்பட் டன.

சிவத்தமிழ் செல்வி அம்மையாரின்
நினைவாக பன்னிரு திருமுறைகளை
யும் பதித்து ஒவ்வொரு ஆலயத்துக்
கும் இலவசமாக வழங்கினார். நான்கு
திசையும் கோபுரம் கண்ட அம்பா
ளுக்கு ஐந்து தளங்களைக் கொண்ட
தலைவாசல் கோபுரத்துக்கான அத்தி
வாரம் இடப்பட்டு வேலைகள் துரிதக
தியில் நடைபெற்று வருகின்றன.

இவற்றைவிட துர்க்காதேவி தேவஸ்
தான மகளிர் இல்லச் செயற்பாடுகளி
லும் செவ்வாய்க்கிழமை தோறும்
ஆலயத்தில் அருளுரை ஆற்றுகின்ற
செயற்பாட்டிலும் செவ்வாய்க்கிழமை
மற்றும் வெள்ளிக்கிழமை தோறும்
அன்னதானமும் மிகசிறந்த முறை
யில் நடைபெற துர்க்காதேவி தேவஸ்
தான தலைவராகவும் ஒரு அடியவரா
கவுமிருந்து பணிகளை ஆற்றி வரு
கின்றார்.

## சிவபூமி

ஆன்மிகச் சொற்பொழிவுகளால்
கிடைத்த பணத்தைக் கொண்டு
சீமாட்டி லீலாவதி சுப்பிரமணியம்
அவர்களால் கோண்டாவிலில் அன்
பளிப்பாக வழங்கப்பட்ட காணியில்
சிவபூமி அறக்கட்டளையின் விதைப்
பயிர் நாட்டப்பட்டது. அவ்வாறே அன்
பளிப்பாக வழங்கப்பட்ட காணியில்
2003ஆம் ஆண்டில் ஆவணிச்
சதுர்த்தி நன்னாளில் சிவத்தமிழ்
செல்வி அம்மாவால் சிவபூமி அறக்
கட்டளையின் முதலாவது பணியாக
சிவபூமி மனவிருத்தி பாடசாலைக்கு
அடிக்கல் நாட்டப்பட்டு ஆசீர்வாதமும்
வழங்கப்பட்டது. (மறுபக்கம் பார்க்க)

**“இந்துசமய கலாசார அலுவல்கள்
திணைக்களத்தின் 30ஆவது ஆண்டு விழாவில்
சைவத்துக்கும் தமிழுக்கும் சமூகத்துக்கும்
துர்க்காதேவி தேவஸ்தானத்துக்கும் ஆற்றிவரும்
சேவைகளை பாராட்டிக் கௌரவிக்கும்
வகையில் நாவலர் விருது வழங்கப்பட்டது.”**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் வழியே சேவை மனப்பான்மை கொண்டவர்களால் வழங்கப்பட்ட நிதியுதவியை ஆதாரமாகக் கொண்டு பாடசாலை அமைக்கப்பட்டு 2004ஆம் ஆண்டு சிவபூமி மனவிருத்திப் பாடசாலை கலாநிதி அப்பாக்குட்டி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அன்று அவர்கூறிய ஆசி 'இன்று தொடங்கிய சிவபூமி பாடசாலை தொடக்கம் இனி யாழ்ப்பாணம் சிவபூமியாக மாறட்டும்' என்றார்.

கோண்டாவிலில் 12 பிள்ளைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை தற்போது 300 க்கும் மேற்பட்ட பிள்ளைகளை ஆற்றுப்படுத்துகின்ற செயற்பாட்டில் ஈடுபட்டு வருகின்றது. தனது கிளைகளை பரப்பி கிளிநொச்சியிலும் திருகோணமலையிலும் சிவபூமி மனவிருத்தி பாடசாலையை நிறுவினார். இந்தியாவுக்கு பயிற்சிக்காக ஆசிரியர்களை அனுப்பி வரவழைத்து அவர்கள் மூலமே மாணவர்களுக்கான பயிற்சியை வழங்கி வருகின்றார்.

## முதியோர் பராமரிப்பு

இவர்களின் அயராத முயற்சியால் 2007 ஆம் ஆண்டு கைவிடப்பட்ட முதியோர்கள், பிள்ளைகள் இல்லாத முதியோர்கள், போரால் குடும்ப உறுப்பினர்களை இழந்த முதியோர்கள் என உதவி தேவைப்படும் முதியோர்களை பராமரிப்பதற்காக சுழிபுரம் தொல்புரம் கிராமத்தில் திருபாலச் சந்திரன் ஐயாவின் உதவியுடன் முதியோர்களுடன் அப்போதைய யாழ். மாவட்டச் செயலரால் ஆரம்பிக்கப்பட்ட இல்லம் தற்போது 80 க்கும் மேற்பட்ட முதியோர்கள் சிறப்பாக இயங்கி வருகின்றது. இவர்களின் இறுதிக் கடமையை திருமுருகன் தானே தனித்து நின்று நிகழ்த்து கின்றார். இதேபோல் இன்னொரு முதியோர் ஆச்சிரமத்தை கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தின் பின் வீதியில் அமரர் கிருஷ்ணபிள்ளையின் புத்திரர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட கிருஷ்ணபிள்ளைமடம் இருந்த இடத்தில் சிவபூமி முதியோர் ஆச்சிரமம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. கீரிமலை கடற்கரை பகுதியில் விஸ்வநாதன் மடத்தின் புத்திரர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் சிவபூமி மடம் ஒன்றை நிறுவி 2010 ஆம் ஆண்டு திறந்து வைத்தார். சிவபூமி மடத்துக்கு அருகில் அகில இலங்கை மாமன்றத்தின் பேருதவியால் சிவபூமி யாத்திரிகர் மடமும் சிவபூமி கலைக் களஞ்சியமும் உருவாக்கப்பட்டு 2016ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. ஆ.ஸ்ரீஸ் கந்தமூர்த்தியால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் சிவபூமி ஞான ஆச்சிரமத்தை அமைத்து அன்னதானங்கள், குருபூசைகள், அறநெறி வகுப்புக்கள் என சிவப்பணிகள் நடைபெறுவதோடு சிவனடியார்கள் ஆறுதல் பெறுவதற்கான வசதிகளும் செய்யப்பட்டு 2013ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.



## திருக்கோவில் திறப்பு

சிவதட்சணாமூர்த்தி திருக்கோயில் 21 அடி உயரமான கருங்கல் இரதம் கருங்கல்லில் கையால் உளி கொண்டு செதுக்கப்பட்ட 658 திருவாசகப் பாடல்கள், பதினொரு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட சிவபுராணங்கள், கருங்கல்லிலும் 108 சிவலிங்கங்கள் என்பவை கொண்டு திருவாசக நூல் ஆராய்ச்சி நிலையம் திரு திருமதி மனமோகன் சிவகௌரி தம்பதிகளின் அன்பளிப்பால் நிறைவேற்றப்பட்டு 2018 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. எம் மண்ணை ஆண்ட 23மன்னர்களின் உருவச் சிலைகளும் புராதன பொருள்கள், அரிய புகைப் படங்கள் சூரிய குடும்ப கட்டுமானம், எம் மூதாதையர்கள் பயன்பாடு என்பவற்றை கொண்ட எம் மூதாதையர்கள் சிவபூமி அரும்பொருட் காட்சியகம் ஒன்று நாவற்குழியில் கடந்த ஆண்டு திறந்து வைத்தார்.

தெருவில் கட்டாக்காலியாக அதிகரிக்கும் நாய்களை பராமரிப்பதற்காக செல்வி ரோகிணி பேராயிரவரினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட நிலத்தில் சிவபூமி நாய்கள் சரணாலயத்தை இயக்கச்சியில் 2019ஆம் ஆண்டு திறந்து வைத்தார்.

எம் தமிழ் மக்களுக்கு உரிய முறையில் வைத்திய ஆலோசனைகளையும் வைத்திய சேவையையும் வழங்க வேண்டும் என்ற நோக்கில் வைத்தியர் பார்த்தீபன் உகவியடன் வைக்கிய





சிவதட்சணாமூர்த்தி திருக்கோயில் 21 அடி உயரமான கருங்கல் இரதம் கருங்கல்லில் கையால் உளிகொண்டு செதுக்கப்பட்ட 658 திருவாசகப் பாடல்கள், பதினொரு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட சிவபுராணங்கள், கருங்கல்லிலும் 108 சிவலிங்கங்கள் என்பவை கொண்டு திருவாசக நூல் ஆராய்ச்சி நிலையம் திரு திருமதி மனமோகன் சிவகௌரி தம்பதிகளின் அன்பளிப்பால் நிறைவேற்றப்பட்டு 2018 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது.

கலாநிதி சத்தியமூர்த்தியின் ஒத்துழைப்புடன் அபயம் மருத்துவ சேவையை ஆனைக்கோட்டை, இயக்கச்சி, ஆதிமயிலிலட்டி ஆகிய இடங்களில் அன்பர்களால் வழங்கப்பட்ட காணியில் ஆறுதிருமுருகன் தலைமையில் முன்னெடுத்து வைத்திய ஆலோசனைகளை அபயம் மருத்துவம் வழங்கி வருகின்றது.

நாவற்குழியில் ஐயனார் கோயில் அவ்வூர் மக்களால் சிவபூமி அறக்கட்டளையிடம் கையளிக்கப்பட்டு சிவபூமி அறக்கட்டளையினரால் பராமரிக்கப்பட்டு வரப்படுகின்றது.

இவற்றையெல்லாம் விட எதிர்கால சிவபூமியின் அறப்பணிக்கு உறுதுணையாக இருக்கவென சுழிபுரம் கொற்றாண்டார்குளம், நாவற்குழி ஆகிய இடங்களில் விவசாயப் பண்ணைகளையும் பஞ்சாமிர்த தோட்டங்களையும் அமைத்து பராமரித்து வருகின்றனர்.

## அலங்கரிக்கும் பதவிகள்

திருமுருகன் சிவபூமி அறக்கட்டளையின் ஸ்தாபகராகவும் தலைவராகவும் துர்க்காதேவி தேவஸ்தான தலைவராகவும் பணியாற்றினாலும், அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவராக, திருக்கேதீஸ்வர திருப்பணி சபை உறுப்பினராகவும் யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் என்று பல்வேறு சமூகமட்ட சங்கங்களினதும், கழங்கங்கள், மன்றங்களில் உறுப்பினராகவும் போசகராகவும் திகழ்கின்றார். மாதந்தோறும் துர்க்கா தேவி தேவஸ்தானத்தால் வெளியிடப்படுகின்ற அருள் ஒளி பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் சிவபூமி அறக்கட்டளையினரால் வெளியிடப்படுகின்ற சிவபூமி பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் திகழ்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கௌரவிப்புக்கள்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பொது பட்டமளிப்பின் போது இவரது சைவப் பணி, தமிழ்ப்பணி, சமூகப் பணிகளை கௌரவித்து யாழ்ப்பாண பல்கலைக்கழக மூதவையின் பரிந்துரையின் கீழ் பேரவை வழங்கிய சிபார்சின் பேரில் கௌரவ கலாநிதிப் பட்டம் 2011 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக வேந்தரால் வழங்கப்பட்டது. இவரது பெயருடன் நிரந்தரமாக சேர்ந்த வகையில் செஞ்சொற்செல்வர் எனும் பட்டத்தை இணுவில் கோண்டாவில் காரைக்கால் சிவன் தேவஸ்தானம் 1992ஆம் ஆண்டு வழங்கி கௌரவித்தது. இவரது அறநெறி பாடசாலை மூலம் ஏற்படும் சைவசமய வளர்ச்சி மற்றும் இவரது பணியையும் பாராட்டி அறநெறி செம்மல் எனும் விருதை லண்டன் சிவயோக நிர்வாகம் 2000ஆம் ஆண்டு வழங்கி கௌரவித்தது. சிவபூமி பாடசாலை திறப்பு விழாவின் போது சிவத்தமிழ் செல்வி அம்மையாரால் வழங்கிய ஆசி சிறுக சிறுக நிறைவேற்றி சாதனை படைத்துள்ளார்.

எண்ணங்கள் நல்லதாக இருந்தால் நடப்பதும் நல்லதே ஆகும். ஆறு திருமுருகனின் உயர்வு அதையே போதிக்கின்றது. திருமூலர் எம் நாட்டை சிவபூமி என்று வர்ணித்தாலும் அதனை மென்மேலும் மெருகூட்டும் வகையில் இவரது பணிகள் அமைந்துள்ளன. இந்த நூற்றாண்டின் சாதனைத் தமிழன் திருமுருகனுக்கு இன்றைய மணிவிழா வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு மென்மேலும் அவரின் பணி சிறக்க இறைவனை பிரார்த்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீப்பற்றிய கப்பலின் ஆய்வுக்கு வருகின்றது நெதர்லாந்து குழு

கொழும்பு, மே 28
கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் தீ விபத்துக்குள்ளான எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலை ஆய்வுசெய்வதற்காக, நெதர்லாந்தில் இருந்து 6 பேர் கொண்ட குழுவொன்று இலங்கைக்கு வரவுள்ளது என்று அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் நங்கூரமிடப்பட்டிருந்த எக்ஸ் பிரஸ் பேர்ள் கப்பலில் கடந்த 19 ஆம் திகதி தீப்பரவல் ஏற்பட்டது. இதனையடுத்து, தீயை அணைக்கும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை கப்பல் தொடர்பில் நெதர்லாந்து விசேட நிபுணர்கள் ஏற்கனவே விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அத்துடன் கப்பல் தீப்பற்றியதால் சுற்றாடலுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பது தொடர்பில் ஆராய, சம்பவ இடத்தில் பெற்றுக்கொண்ட மாதிரிகள் இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஏ-4)

## சீரற்ற காலநிலை 30,000 பேர் பாதிப்பு

கொழும்பு, மே 28
நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக, 6 மாகாணங்களில் 9 ஆயிரத்து 96 குடும்பங்களைச் சேர்ந்த 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன் சீரற்ற காலநிலையால் ஒருவர் காணாமல் போயுள்ளார். 215 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. 13 தற்காப்பு நிலையங்களில் 76 குடும்பங்கள் தங்கியுள்ளன என்றும் தெரிவித்துள்ளது.

அதேவேளை ஆறுகளில் நீர்மட்டம் அதிகரித்தமை தற்போது குறைவடைந்து வருகின்றது என்றும் நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஏ-4)

## அடங்குகின்றது யாஸ் சூறாவளி

கொழும்பு,மே 28
யாஸ் என்ற சூறாவளியால் நாட்டில் ஏற்பட்ட தாக்கம் படிப்படியாக குறைவடையும் என்று வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

அதேவேளை மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும், திருகோணமலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 தொடக்கம் 50 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது என்றும் வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. (ஏ-4)



# கப்பல் முழுமையாக அழிவடைந்தால் அமில மழை பெய்யும் ஆபத்து

சுற்றுச்சூழல் ஆணையம் தகவல்

கொழும்பு,மே 28
**கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் தீப்பற்றி எரியும் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் முழுமையாக அழிவடைந்தால், இலங்கையில் அமில மழை பெய்யும் ஆபத்து உள்ளது.**

இவ்வாறு மத்திய சுற்றுச்சூழல் ஆணையம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் ஆணையத்தின் தலைவர் எஸ்.அமரசிங்க தெரிவிக்கையில், கப்பலுக்குள் நைட்ரிக் அசிட் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இலங்கை கடல் கட்டமைப்பு உட்பட முழு சுற்றுச்சூழலும் கடுமையாகப் பாதிக்கப்படக்கூடும். கப்பலில் உள்ள இரசாயனங்கள் காரணமாக நீண்ட காலப் பிரச்சினைகள் ஏற்படக்கூடும்- என்றார். (ஏ-4)

## கப்பல் விபத்தால் மீன்கள் ஆய்வுக்கு



கொழும்பு,மே 28
கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் உள்ள கடற்பரப்பில் நங்கூரமிடப்பட்டிருந்த கப்பல் தீ விபத்துக்குள்ளானதால், இலங்கைக் கடற்பரப்பில் பிடிபடும் மீன்களின் மாதிரிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்படும் என்று நாரா நிறுவனம் தெரிவித்துள்ளது. தீப்பற்றிய கப்பலில் இருந்து வெளியேறிய எரிபொருள் கடலில் கலந்தமையால் ஏற்படக்கூடிய அபாயம் மற்றும் கடலுணவுகளை உட்கொள்வது தொடர்பில், நாரா நிறுவனத்தின் சுற்றாடல் பிரிவின் பணிப்பாளர் சாமலி வீரசேகர தெரிவிக்கையில், தற்போதைய நிலையில், கடந்த 5, 6 நாள்களாக மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை என்பதால், எவ்வித பிரச்சினையும் இல்லை. எவ்வாறிருப்பினும் மீன்களின் மாதிரிகள் பெற்று ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். என்றார். அதேவேளை தீப்பரவலுக்கு உள்ளான கப்பலின் தீயைக் கட்டுப்படுத்தும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடற்படை மற்றும் துறைமுக அதிகார சபை ஆகியவை உள்ளிட்ட தரப்பினருடன், இந்தியாவின் சமுத்திர பாதுகாப்புக் கப்பலும், விமானமும் தீயைக் கட்டுப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டுள்ளன. இதேவேளை இந்தச் சம்பவத்தால் நாட்டில் வளிமாசடைவு ஏற்படாது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஏ-4)

## கம்பியால் தாக்கி பெண் கொலை

மட்டக்களப்பு, மே 28
குடும்பப் பெண்ணொருவர் இரும்புக் கம்பியால் தாக்கிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு ஆயித்தியமலை பொலிஸ் பிரிவில் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது. ஆயித்தியமலை தெற்கு கிராமத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயே இவ்வாறு கொலைசெய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தில் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார். என்று தெரிவிக்கப்படுகிறது. (ஏ-4)

# நெடுஞ்சாலையை புனரமைக்க சீன நிறுவனத்துடன் ஒப்பந்தம்

கொழும்பு, மே 28
இராஜகிரிய ஊடாக களனி புதிய பாலத்துக்கான நெடுஞ்சாலையை நிர்மாணிப்பதற்குரிய ஒப்பந்தத்தை சீன நிறுவனத்துக்கு வழங்குவதற்கு, அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

மூன்று வருடங்களுக்குள் இந்த செயல் திட்டத்தை பூர்த்தி செய்யும் வகையில், சைனா ஹாபர் என்ஜினியரிங் நிறுவனத்துக்கு ஒப்பந்தத்தை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இந்தப் பாதையை மேலும் 15 வருடங்களுக்கு இயக்கி இலாபம் ஈட்ட சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. 18 வருடங்களின் பின்னர் இந்த நிறுவனம் இலங்கை அரசிடம் குறிப்பிட்ட நெடுஞ்சாலையை ஒப்படைக்க வேண்டும்.

நிர்மாணித்து பராமரித்து ஒப்படைத்தல் முறைமையின் அடிப்படையில் இந்த ஒப்பந்தத்துக்கு அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, முதலீட்டுக் கருத்திட்டத்துக்கான குறித்த முதலீட்டாளர்களின் தொழிநுட்ப மற்றும் நிதி யோசனைகள் அடங்கிய போட்டி விலைமனு கோரப்பட்டுள்ளது. அதற்கமைய, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தை உடன்பாட்டுக் குழுவின் பரிந்துரைக்கமைய, குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சைனா ஹாபர் நிறுவனத்துக்கு வழங்குவதற்காக நெடுஞ்சாலைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஏ-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆளுங்கட்சியின் பதவியொன்றில் விரைவில் மாற்றம்

கொழும்பு, மே 28

ஆளுங்கட்சியில் உள்ள பதவி ஒன்று விரைவில் மாற்றமடையும் என்று கட்சி உள்ளக வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடக மொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதற்கமைவாக ஆளுங்கட்சி பிரதி அமைப்பாளர் பதவியை, பின்வ ரிசை நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வழங்க ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக் கப்படுகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினரான பிர மித்த பண்டார தென்னக்கோனுக்கு இந்தப் பதவி வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆளுங்கட்சி பிரதி அமைப்பாளர் பதவி 4 வகைகளாக உள்ளன. அதில் ஒருவரே இவ்வாறு மாற்றப் படவுள்ளார் என்றும் தெரிவிக்கப்ப டுகின்றது. (எ-4)

# நாடாளுமன்ற அவசர கூட்டத்தாலேயே எதிர்க்கட்சித் தலைவருக்கு தொற்று!



**கொழும்பு, மே 28**

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு நாடாளுமன்றுக்கு வெளியே கொரோனாத் தொற்று பரவியது என்பதை எதிர்க்கட்சி நாடாளு மன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல நிராகரித் துள்ளார்.**

சபாநாயகர் அலுவலகத்திலும், செய லாளர் அலுவலகத்திலும் கொரோனாத் தொற்றாளர்கள் இருந்துள்ளனர். இந்த நிலையில் மே 18 முதல் நாடாளுமன்ற அமர்வுகள் நடத்தப்படாவிட்டால் அவ ருக்குத் தொற்று ஏற்பட்டிருக்காது.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார சட்ட வரைவுக்கு ஒப்புதலைப் பெறவே அரசு, இந்த காலத்தில் சபையைக் கூட் டியது.

இதன்போது நாடாளுமன்ற பொதுச் செயலாளரைச் சந்தித்து அமர்வுகளை ஒத்திவைக்க சஜித் பிரேமதாச முயன் றார். அவரது கோரிக்கை நிராகரிக்கப் பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை சஜித் பிரேமதாச நாடாளு மன்றுக்குள் தொற்றுக்குள்ளானாரா? என்பது தொடர்பில் மருத்துப் பகுப் பாய்வு எதுவும் நடத்தப்படவில்லை என்று நாடாளுமன்ற படைக்கள சேவி தர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித் துள்ளார்.

சபாநாயகர் அலுவலகத்திலும், பொதுச் செயலாளர் அலுவலகத்திலும் ஒரு மாதத்துக்கு முன்னர் தொற்றாளர்கள் கண்டறியப்பட்டனர்.

எனவே சஜித் பிரேமதாசவுக்கு தொற்று ஏற்படுவதற்கு இந்த அலுவலங்களில் வாய்ப்பில்லை. பணியாளர்கள் வீடுக ளில் இருந்து பணியாற்றுவதால், நாடா ளுமன்ற வளாகத்துக்குள் கொரோனா பரவுவதற்கான வாய்ப்புகள் குறைவு என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)



## குணமடைந்தார் முஜிபுர் ரஹ்மான்

கொழும்பு, மே 28

கொரோனாத் தொற்றுக்குள்ளான எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப் பினர் முஜிபுர் ரஹ்மான் பூரண குணமடைந்துள்ளார் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை அவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. கொழும்பிலுள்ள தனியார் மருத் துவமனையில் அவர் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தார்.

தற்போது அவர் பூரண குணம டைந்து வீடு திரும்பியுள்ளார். எனி னும் அவரது மனைவி மற்றும் பிள்ளைகள் தொடர்ந்தும் தனி மைப்படுத்தப்பட்டுள்ளனர். (எ-4)

## பேர்ள் கப்பலின் இரசாயனக்கசிவு அரேபியக் கடலில் கண்டுபிடிப்பு

கொழும்பு.மே 28



கொழும்பு துறைமு கம் அருகே எரிந்து கொண்டிருக்கும் கப் பலின் இரசாயனக் கசிவு, இலங்கையி லிருந்து ஆயிரம் கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள அரே பியக் கடலில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கப்பலின் உரிமையைக் கொண்ட சிங்கப்பூர் நிறுவனத்தின் நிர் வாக இயக்குநர் டிம் ஹார்ட் னோல், கப்பல் தீப்பிடித்தமைக்கு இரசாயனங்கள் கசிந்தமையே காரணம் என்று தெரிவித்துள்ளார்.

விபத்து நடந்த நேரத்தில் கப்ப லின் கப்டன் இந்தியாவின் ஹசீரா மற்றும் கட்டாரின் ஹமாட் துறைமுகங்களுக்குள் நுழைய அனுமதி கோரியிருந் தார்.

எனினும் அத்துறைமுகங்களிலி ருந்து பதில் கிடைக்காததால், கொழும்புத் துறைமுகத்துக்கு கப்பல் திருப்பி விடப்பட்டுள்ளது.

இதேவேளை கப்பல் முழுவது மாக சேதமடைந்துள்ளதை கப் பலை சொந்தமாகக் கொண்ட நிறுவனம் ஒப்புக்கொண்டுள் ளது. (எ-4)

### காஸா - இஸ்ரேலிலிருந்து

## இலங்கையர்களை அழைக்கத் திட்டம்

கொழும்பு, மே 28

தேவை ஏற்பட்டால் காஸா மற்றும் இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

காஸா மற்றும் இஸ்ரேலுக்கு இடையில் நடந்த கடுமையான மோதல் எகிப்தின் தலையீட்டால் கடந்த வெள்ளிக்கிழமை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. 11 நாள்கள் நீடித்த கடுமையான மோதலில் காஸாவில் குறைந்தது 242 பேர் கொல்லப்பட்டனர். 13 பேர் இஸ்ரேலில் கொல்லப்பட்டனர்.

இந்த நிலையில் காஸாவின் முன்னேற்றங்கள் தினசரி மதிப்பீடு செய்யப்படுகின்றன என்று பிராந்திய கூட்டுறவு இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்துள்ளார்.

அதற்கமைவாக அங்குள்ள இலங்கையரின் நலனை ஆராய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேவை ஏற்பட்டால் இலங்கையர்கள் பல கட்டங்களில் வெளியேற்றப்படுவர். அங்குள்ள இலங்கையர்களை நாம் மறக்கவில்லை. முழுமையான கண்காணிப்பில் உள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)





# வெசாக் வலயத்தை திறந்தார் மஹிந்த

கொழும்பு. மே 28

ஹுணுபிட்டிய கங்காராம விகாரை யில் அமைக்கப்பட்ட, புத்த ரஷ்மி தேசிய வெசாக் வலயத்தை, புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும், பிரதம ருமான மஹிந்த ராஜபக்ச நேற்றுத் திறந்தார்.

[illegible]

பிரிவெனா கல்வி கற்கும் இளம் பிக்குமார் 100 பேருக்கு 'சாமனேரு காப்புறுதி' என்ற உதவித்தொகை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.


அதனைத் தொடர்ந்து, கங்காராம எல்லை அருகே புத்த ரஷ்மி தேசிய வெசாக் வலயத்தை உத்தியோகபூர்வமாகத் திறந்தார்.

[illegible]

தான சங்கநாயக்கர் வல்பொல பியனந்த தேரர், மாத்தறை ஹிந் தெடிய ரஜமஹா விகாரை மற்றும் கொட்டாவ மாலபல்ல ஸ்ரீ சுதர்ஷ ணாராம அதிபதி மற்றும் முன்னாள் மேல் மாகாண பிரிவெனா கல்வி இயக்குநர், அக்ரஹேர கஸ்ஸப தேரர் உள்ளிட்ட மஹா சங்கத்தினர் [illegible] (எ-4)

## வாகன உதிரிப்பாகங்களால் காரை வடிவமைத்தவர் கைது

கொழும்பு,மே 28



ஐக்கிய தேசியக் கட்சியின் முன் னாள் உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள் ளார்.

வாகன உதிரிப்பாகங்கள் மோசடியில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் இவர் கைது செய்யப்பட் டுள்ளார்.

56 வயதான சந்தேக நபரை, பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சட்டத்தை மீறி சந்தேகநபர் வாகனப் பாகங் களை இறக்குமதிசெய்து, இலங்கையில் ஒரு வாகனத்தைத் தயாரித்துள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாங்குளம் நகரில் தொற்று நீக்கம்

முல்லைத்தீவு,மே 28

முல்லைத்தீவு மாங்குளம் நகரப் பகுதியில் தொற்று நீக்கும் செயற்பாடு நேற்றுமுன் தினம் முன்னெடுக்கப்பட்டது.

மாங்குளம் நகரப் பகுதியில் தொற்றாளர் அடையாளம் காணப்பட்டதையடுத்து புதுக் குடியிருப்பு பிரதேச சபையினரால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பகுதியில் 20 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள் ளன. இவர்களுக்கான உணவுப் பொருள் களை வழங்குமாறு அப்பகுதி மாதர் சங்கம் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-13)

# வவுனியா மருத்துவமனையில் தொற்று நீக்கும் செயற்பாடு

வவுனியா,மே 28

கொரோனாத் தொற்றை கட்டுப்படுத்தும் நோக்கில் வவுனியா மருத் துவமனையில் தொற்றுநீக்கும் செயற்பாடு நேற்று முன்னெடுக்கப் பட்டது. வவுனியா நகரசபையின் தீயணைப்பு வாகனங்களால் மருத்துவமனை கட்டடங்கள் நீர்பாய்ச்சி தூய்மையாக்கப்பட்டு மருந் துகள் விசிறப்பட்டன. (ஐ-110)





தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்கு சர்வோதயம் அமைப்பினர் ஒரு தொகுதி சுகாதார பாதுகாப்பு பொருள்களை அண்மையில் வழங்கினர் என்று பிரதேச செயலர் ச. சிவசிறி தெரிவித்துள்ளார். (ஐ-9)



முல்லைத்தீவு மாவட்டத்தின் குமுழமுனை பிரதேசத்தைச் சேர்ந்த 20 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. குமுழமுனை மத்தி கலை வாணி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.(ஐ-13)



# 225 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள்

முல்லைத்தீவு,மே 28

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேசத்துக்கு உட் பட்ட பூதன் வயல் கிராமத்தைச் சேர்ந்த 225 பொருண்மியம் நலிவடைந்த உலர் உணவுப் பொதி கள் வழங்கப்பட்டன.

வன்னியின் கண்ணீர் என்ற அமைப்பின் ஊடாக ஆஸ்திரேலியாவில் வசிக்கின்ற முரளிதரன் குடும்பம் மற்றும் காலஞ்சென்ற கந்தையா செல்வச்சந்திரனின் குடும்பம் ஆகியோரின் நிதி உதவியில் இந்த பொருள் கள் வழங்கப்பட்டன. (ஐ-19)



# 60 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள்

கொடிகாமம்,மே 28

பயணக் கட்டுப்பாட்டால் தொழில் பாதிக்கப்பட்ட மற்றும் வருமானம் குறைந்த 60 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

மகிழங்கேணி, உதயசூரியன், நுணாவில், டச்சு வீதி கச்சாய்,உதயசூரியன், நுணாவில் மற்றும் சிவன் கோவிலடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்க ளுக்கே உலர் உணவுப் பொதிகள் கடந்த செவ்வாய்க் கிழமை வழங்கப்பட்டன.

சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் ம.நடனதேவனின் ஏற்பாட்டில் மறைந்த யூலியன் சேவியர் நினைவாக லண்டன் தஷ்மி என்ரப்பிறைசஸ் நிறுவனத்தினர் மற் றும் அமரர் யோகராணி தில்லைநடராஜன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவாக அவரது குடும்பத்தினர் ஆகியோரின் நிதிப் பங்களிப்பில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-159)

# குமுழமுனைக்கு உணவுப் பொதிகள்

முல்லைத்தீவு,மே 28

கொரோனாத் தொற்றால் அன்றாடம் கூலி வேலை பாதிக்கப்பட்ட 60 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் குமுழமுனை மத்தி, குமுழமுனை கிழக்கு, குமுழமுனை மேற்கு மற்றும் தண்ணிமுறிப்பு ஆறுமுகத் தான்குளம் ஆகிய கிராம அலுவலகர் பிரிவு களைச் சேர்ந்த மக்களுக்கே உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. குமுழமுனை சமூக மேம்பாட்டு ஒன்றியத்தினர் மற்றும் கந்தசாமி பத்மநாதன் ஆகியோர் இதற்கான நிதியுதவியை வழங்கியிருந்தனர். (ஐ-3)





# 115 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள்

வவுனியா,மே 28

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலகத் துக்குட்பட்ட பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்ட 115 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் நேற் றுமுன்தினம் வழங்கப்பட்டன. வவுனியா மாவட்டச் செயலரின் வழிகாட்டுதலுக்கு அமைவாக, நெடுங் கேணி பிரதேச செயலரின் உத்தரவுக்கு அமைய, கிராம அலுவலர்களால் தெரிவு செய்யப்பட்டவர்க ளுக்கு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன (ஐ-115)





# 200 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள்

முல்லைத்தீவு,மே 28

முல்லைத்தீவில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப் பட்ட வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட 200 குடும்பங்க ளுக்கு உலர் உணவுப் பொதிகள் அண்மையில் வழங் கப்பட்டன.

கிராமிய அபிவிருத்தி நிறுவனத்தின் நிதிப்பங்களிப் பில், முல்லைத்தீவு கரைதுறைப்பற்று மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கே மாவட் டச் செயலர் ஊடாக உலர் உணவுப்பொதிகள் வழங் கப்பட்டன. (ஐ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றும் நாளையும்

# ஓய்வூதியக் கொடுப்பனவுக்காக திறக்கப்படுகின்றன தபாலகங்கள்

**கொழும்பு, மே 28**

**தபால் நிலையங்கள் இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை திறக்கப்படவுள்ளன என்று தபால்மா அதிபர் அறிவித்துள்ளார்.**

ஓய்வூதியக் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக மாத்திரம் குறித்த காலப்பகுதியில் தபால் நிலையங்களைத் திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

இதற்கிணங்க, முதியோர்களுக்கான கொடுப்பனவு மற்றும் விவசாயிகளுக்கான கொடுப்பனவு ஆகியவை உள்ளிட்டவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தபால்மா அதிபர் அறிவித்துள்ளார். (த-இ)

## பொலிஸாரை வசியப்படுத்தும் விவரங்களுடன் எண்மர் கைது

**அலைபேசிகள், மடிக்கணினிகள் கடவுச்சீட்டுக்கள் மீட்பு**

அம்பாறை, மே 28

ஹெரோய்ன், வங்கி தன்னியக்க பண இயந்திர அட்டைகள் மற்றும் மடிக்கணினி ஆகியவற்றுடன் 8 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கல்முனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து ஹெரோய்ன் ஒரு பொதி, 14 அலைபேசிகள், 2 மடிக்கணினிகள், கணனி சேமிப்பகம், கமரா ஒன்று, கடவுச்சீட்டுகள் மற்றும் வங்கி தன்னியக்க பண இயந்திர அட்டைகள் என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

பொலிஸாரை மந்திரத்தால் வசியப்படுத்தும் விவரங்கள் அடங்கிய தாள்கள் என அடையாளப்படுத்தப்பட்டவையும் சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த மருத்துவமனைக்கு அருகில் வாடகை வீடொன்றில் தங்கியிருந்த நிலையில் அந்த 8 பேரும் நேற்று மாலை கல்முனை சிறப்பு பொலிஸ் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் சுமார் 27 முதல் 40 வயது மதிக்கத்தக்கவர்கள்.

இதில் கைதான ஒருவர் பல்வேறு குற்றச்செயல்களுக்காக நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த-இ)



## கிளிநொச்சி – சிவநகரில் வெடிக்காத குண்டு மீட்பு!

கிளிநொச்சி, மே 28

கிளிநொச்சி- உருத்திரபுரம் சிவநகர் பகுதியில் வெடிக்காத நிலையில் குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உருத்திரபுரம் பகுதியில் காணியொன்றைத் துப்பரவு செய்யும்போதே மேற்படி குண்டு மீட்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவைப்பெற்று குண்டைச் செயலிழக்க வைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-6)

## அரச தாதிய சங்கம் திங்களன்று போராட்டம்

கொழும்பு, மே 28

தமது சங்கத்தின் கோரிக்கைகள் எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் நிறைவேற்றத்தவறும் பட்சத்தில், திங்கட்கிழமை மதியம் 12 மணி தொடக்கம் ஒரு மணி அடையாள பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவோம் என்று அரச தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தக் கோரிக்கைகளை வென்றெடுக்க அனைத்து தாதியர்களும் ஒன்றிணைய தயாராகுமாறும் அரச தாதியர் உத்தியோகத்தர் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

அதன்படி, சங்கம் பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்துள்ளது. தாதிய உத்தியோகத்தர்களின் குடும்பத்தினருக்கும் ஏனைய சுகாதாரத் துறையினரின் குடும்பத்தினருக்கும் கொவிட் தடுப்பூசி ஏற்றல் வேண்டும், அனைத்து தாதியருக்கும் 5 ஆயிரம் ரூபா இடர் கொடுப்பனவு வழங்குதல் வேண்டும், புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட 4 ஆயிரம் தாதிய உத்தியோகத்தர்களுக்கும் கொவிட் தடுப்பூசி ஏற்றல் வேண்டும், கர்ப்பிணி தாதிய உத்தியோகத்தர்களுக்கு விசேட விடுமுறை வழங்கல், கொவிட் பரிசோதனை பிரிவில் உள்ள தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு போதிய வளங்களை ஏற்படுத்துதல், பயணத் தடைக் காலத்தில் தாதிய உத்தியோகத்தர்கள் கடமைக்கு வருகைதருவதற்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், கொரோனா சிகிச்சை மையங்களிலும் ஏனைய சுகாதாரசார் நிறுவனங்களிலும் கடைமை புரியும் தாதிய உத்தியோகத்தர்களுக்கு என் 95 முகக்கவசம் மற்றும் உரிய பாதுகாப்பு உடைகள் வழங்கப்பட வேண்டும். - என்பவையே எமது கோரிக்கை.


ஆனால், எம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளில் குடும்பத்தினருக்கான தடுப்பூசி ஏற்றலுக்கு மட்டுமே இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய கோரிக்கைகளான இடர்கால கொடுப்பனவு மற்றும் கர்ப்பிணித் தாதியருக்கான விடுமுறை என்பவை தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்பட்டும் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (த-150)

## வெடிபொருள்களுடன் திருமலையில் இருவர் கைது

திருகோணமலை இறக்கண்டி பகுதியில் வெடிபொருள்களுடன் இரண்டு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். நேற்றுக் காலை தமக்குக் கிடைக்க பெற்ற தகவல் ஒன்றின் அடிப்படையில் குறித்த இரண்டு பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதானவர்கள் இறக்கண்டி பகுதியைச் சேர்ந்தவர்கள்.

இந்த வெடி பொருள்களைப் பயன்படுத்தி குறித்த இரண்டு பேரும் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கக்கூடும் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (த-இ)

## கொரோனாவால் பெண் உயிரிழப்பு



கொழும்பு, மே 28

பதுளை மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுக் காரணமாக 20 வயது பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஹாலிஎல பகுதியைச் சேர்ந்த 20 வயது நிரம்பிய பெண்ணொருவரே கொரோனாத் தொற்றால் நேற்றுமுன்தினம் மாலை உயிரிழந்துள்ளார். இந்தநிலையில் பதுளை மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30 ஆக உயர்ந்துள்ளது என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர் அந்த வகையில், பதுளையில் 8 பேரும், வெலிமடையில் 7 பேரும், தியத்தலாவையில் 7 பேரும், பண்டாரவளையில் 6 பேரும், பசறையில் 2 பேருமாக 30 பேர், கொரோனாத் தொற்றுக் காரணமாக பதுளை மாவட்டத்தில் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

# வடக்கு கிழக்கு மக்களுக்கு தடுப்பூசிகளை வழங்குங்கள்

## இந்திய உயர்ஸ்தானிகருக்கு விக்னேஸ்வரன் எம்.பி. கடிதம்

யாழ்ப்பாணம், மே 28

கொரோனாத் தொற்றால், ஆபத்தான நிலைமையை எதிர்கொண்டுள்ள இலங்கையின் வடக்கு கிழக்கு வாழ் மக்கள், இந்திய அரசின் சாத்தியமானளவு உதவிகளை, குறிப்பாக பற்றாக்குறையாக உள்ள தடுப்பு ஊசிகளை எதிர்பார்த்துள்ளார்கள். எனவே, இந்த விடயத்தில் தங்களிடமிருந்து சாதகமான பதிலை நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருக்கின்றோம்.

இவ்வாறு குறிப்பிட்டு, இந்தியாவின் இலங்கை உயர்ஸ்தானிகருக்கு, யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்றுக் கடிதம் அனுப்பியுள்ளார்.

இதன் பிரதி யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத்தூதரகத்துக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் வகையில் அதிகளவிலான கொவிட்-19 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இந்தநிலையில் கொவிட் தடுப்பு ஊசிகள் மிக அவசரமாக எமது வடக்கு கிழக்கு மக்களுக்குத் தேவையாக உள்ளன. இந்த ஆபத்தான நிலைமை பற்றி யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகமும் நன்றாக அறிந்திருக்கும்.

இந்தநிலையில் இலங்கை அரசால் தருவிக்கப்பட உள்ள சீனத் தடுப்பு ஊசிகளில் எவ்வளவு எமது மக்களுக்கு கிடைக்கும் என்று தெரியாது. இலங்கை அரசும் இந்திய மத்திய அரசிடம் அவசர கோரிக்கை விடுத்துள்ளது. ஆனாலும் தடுப்பு ஊசிகள் பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

மேலும் இந்தியாவில் ஏற்பட்டுள்ள ஆபத்தான நிலைமை பற்றியும் நாம் அவதானித்துள்ளோம். எனினும், இலங்கையின் வடக்கு கிழக்கு நிலைமையையும் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்குமாறும் உரிய பதிலை நம்பிக்கையுடன் எதிர்பார்த்துள்ளோம் என்றும் விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org